குறு சிறு தொழிலகங்களுக்கான வங்கி நெறிமுறைக் கோட்பாடுகள்

ஆகஸ்டு 2015

பேங்கிங் கோட் அண்டு ஸ்டான்டார்டு போர்டு ஆப் இந்தியா
www.bcsbi.org.in

வங்கியின் வாடிக்கையாளர்களான குறு மற்றும் சிறு தொழிலகங்களின் அன்றாட நடவடிக்கைகளிலும், நிதியியல் நெருக்கடி நேரங்களிலும் வங்கிச் சேவைகளை இலகுவாக, விரைவாக, ஒளிவு மறைவில்லாத முறையில் வழங்கிட, வங்கிகளின் நேர்மையான அர்ப்பணிப்பிற்கான தன்னார்வமாக ஏற்றுக்கொண்ட நெறி இதுவாகும். இந்நெறி, குறு மற்றும் சிறு தொழிலகங்களின் உரிமைகளின் சாசனம் மட்டுமல்ல, வங்கிகளுக்கும் இவைகளுக்கும் இடையேயான கடப்பாட்டையும் உணர்த்துவதாகும். வாடிக்கையாளர்களுக்கான வங்கியின் கடப்பாட்டு நெறித் தொகுப்பின் கருத்துக்கள் குறு, சிறு நிறுவன வாடிக்கையாளர்களுக்கும் எங்கெல்லாம் ஏற்புடையதோ, அந்த இடங்களில் பொருந்தும்.

பொருளடக்கம்

வரிசை எண்		விவரம்
1		**முன்னுரை**
	1.1.	நெறியின் நோக்கங்கள்
	1.2.	நெறியின் பிரயோகம்
2		**முக்கிய பொறுப்புகள்**
	2.1	உங்களுக்கான எங்களது முக்கிய பொறுப்புகள்
	2.1.1.	உங்களுடனான எங்களின் எல்லா நடவடிக்கைகளிலும் நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ள
	2.1.2	எங்களது நிதிப் பொருட்கள், சேவைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்று நீங்கள் புரிந்து கொள்ள நாங்கள் உதவுவோம்
	2.1.3	உங்கள் கணக்கை நீங்கள் உபயோகிப்பதில் உங்களுக்கு உதவ அல்லது சேவை புரிய
	2.1.4	தவறுகள் ஏற்படும்போது, துரிதமாகவும் கருணையோடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வசதியாக
	2.1.5.	உங்களது தனிப்பட்ட மற்றும் வணிக சம்பந்தமான தகவல்கள் அனைத்தையும் ரகசியமாக அந்தரங்கத்துடன் பாதுகாப்போம்
	2.1.6.	நெறித் தொகுப்பை பிரசுரித்தல்
	2.1.7.	பாகுபாடில்லாக் கொள்கையை ஏற்று அமல் படுத்துதல்
3		**தகவல்கள் – ஒளிவுமறைவற்ற தன்மை**
	3.1	பொது
	3.2	வட்டி விகிதம்
	3.3.	கட்டணப் பட்டியல்
	3.4.	விதிகளும் நிபந்தனைகளும்
4		**அந்தரங்கம் மற்றும் ரகசியம் காத்தல்**
	4.1	கடன் தகவல் அளிப்பு கம்பெனிகள்
5		**கடன் வழங்கல்**
	5.1	விண்ணப்பம்
	5.2.	கடன் மதிப்பீடு
	5.3.	ஒப்புதல் / மறுத்தல்
	5.4.	மத்தியப் பதிவேடு
	5.5.	கடன் வழங்கிய பின்னர்
	5.6	நிதிசாரா வசதிகள்
	5.7.	காப்பீடு
	5.8.	நிதியியல் இடர்கள்
	5.9	நலிவடைந்த குறு சிறு தொழிலகங்களைப் புனரமைப்பதும், கடன் மறுகட்டமைப்புச் செய்தலும்
	5.10	ஒருமுறைத் தீர்வு
	5.11	கடன்களை மற்றும் பாக்கிகளைப் பிணையத்துடன் இணைத்தல்
6		**கடன் பாக்கியை வசூலித்தல் மற்றும் பிணையத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் கொள்கை**
	6.1	கடன் பாக்கியை வசூலித்தல்
	6.2	கடன் பாக்கியை வசூலித்தல் மற்றும் பிணையத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் கொள்கை

பின்னிணைப்பு – சொற்களஞ்சியம்

முன்னுரை

வங்கிகள் தாமே விரும்பி ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்த நெறிமுறைத் தொகுப்பு என்பது 2006-ஆம் ஆண்டு **குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிலகங்களின்** வளர்ச்சிச் சட்டத்தில் விளக்கியுள்ளபடி, குறு, சிறு தொழிலகங்களோடு வங்கிகள் தொடர்பு கொள்ளும்போது வங்கிகள் கடைப்பிடிக்க வேண்டிய குறைந்தபட்ச நெறிமுறைகளின் தொகுப்பாகும். உங்களுக்கு இது பாதுகாப்பை அளிக்கிறது. உங்களின் அன்றாட செயல்பாடுகளிலும், நிதி நெருக்கடிகளின் போதும் உங்களோடு வங்கி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் இது விளக்குகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி அளித்துள்ள ஒழுங்குபடுத்தும் அல்லது கண்காணிக்கும் அறிவுரைகளை மாற்றியோ அல்லது புறந்தள்ளியோ இந்நெறித் தொகுப்புகள் அளிக்கப்படவில்லை. மேலும் இந்திய ரிசர்வ் வங்கியால் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுரைகளையும், ஆணைகளையும் நாங்கள் ஏற்று செயல்படுத்துவோம். ஒழுங்குபடுத்தும் அல்லது கண்காணிக்கும் அறிவுரைகளில் சொல்லப்பட்டவைகளைக் காட்டிலும் கூடுதலான தரத்தை இந்நெறித்தொகுப்பு அளிக்கலாம். இந்த உயர்ந்த தரம் என்பது உங்களுக்கு நாங்கள் பணியாற்ற ஒப்புக்கொண்ட சிறந்த பழக்கவழக்கங்களின் அடையாளமாகும்.

இந்நெறித்தொகுப்பில் “நீங்கள்” என்பது இந்தியாவில் உள்ள குறு மற்றும் சிறு தொழிலகங்களை குறிக்கும். “நாங்கள்” என்பது நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய வங்கியைக் குறிக்கும்.

1.1 நெறியின் நோக்கங்கள்:

இந்நெறித்தொகுப்பின் நோக்கங்கள் பின்வருமாறு:

(a) குறு, சிறு தொழிலகங்கள் பிரிவிற்கு, நேர்மறையான உத்வேகத்தை அளித்திட தகுந்த **வங்கிச் சேவைகளை** எளிதில் அணுகிப் பெறும் வகையில் முக்கியத்துவம் கொடுத்தல்

(b) நேர்மையான நல்ல வங்கிப் பழக்கங்களை வளர்க்கும் எண்ணத்தோடு உங்களுக்கான நடவடிக்கைகளில் குறைந்தபட்ச தரத்தை வங்கிகளுக்கு நிர்ணயித்திட

(c) வங்கிச் சேவைகளில் நீங்கள் நியாயமாக எவற்றை எதிர்ப்பார்க்கமுடியும் என்பது குறித்து மேலும் அதிகமாக நீங்கள் புரிந்து கொள்ள ஏதுவாக வங்கி நடவடிக்கைகளில் ஒளிவுமறைவு இல்லா வெளிப்பாட்டுத் தன்மையை அதிகரித்திட

(d) திறமையான தொடர்பால் உங்களுடைய வியாபாரத்தைப் பற்றி எங்களது புரிந்து கொள்ளும் திறனை அதிகப்படுத்துதல்

(e) உயர்வான செயல்பாட்டுத் தரத்தைப் பெற்றிட போட்டிகள் மூலமாக சந்தைப் பங்கேற்பை ஊக்குவித்திட

(f) உங்களுக்கும் எங்களுக்கும் இடையேயான நேர்மையான, சுமுகமான உறவை வளர்த்திட

(g) உங்களுடைய வங்கித் தேவைகளை காலத்தோடு மற்றும் விரைவாக அளித்திட

(h) வங்கி முறைமையில் நம்பிக்கையை வளர்த்திட

பகுதி (2)-ல் "**முக்கியப் பொறுப்புகளில்**" நெறித்தொகுப்பின் தரம் குறித்த விவரங்கள் உள்ளன.

1.2 நெறியின் பிரயோகம்

2006 – ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிலகங்களின் வளர்ச்சி சட்டத்தில் விளக்கியுள்ளபடி, பொருட்கள் தயாரித்தல், உற்பத்தி செய்தல், பதனிடுதல், பதப்படுத்துதல் போன்ற தொழில்களில் ஈடுபடும் அல்லது **சேவைகளை** அளிக்கும் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு இது பொருந்தும். வேறுவிதமாகச் சொல்லாதபட்சத்தில் கீழே குறிப்பிட்டுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் இந்த நெறித் தொகுப்பு பொருந்தும். தற்போது நடைமுறையிலுள்ள ஒழுங்கு முறை அறிவுரைகளின் படி, பொருட்களும் சேவைகளும் கிளைகள், துணை நிறுவனங்கள் கூட்டுமுயற்சி, முகவர்கள் மூலமாகவோ அல்லது அவர்களின் முகப்புகள், தொலைபேசி, அஞ்சல், மின்னணு சாதனங்கள், இணையதளம், இதுபோன்ற பிற வழியாக வழங்கப்பட்டு இருந்தாலும் இந்த நெறித் தொகுப்பு பொருந்தும். ஆயினும் இங்கே சொல்லப்பட்டிருக்கிற அனைத்துப் பொருட்களையும் நாங்கள் அளிக்கிறோம் என்று கருதக்கூடாது.

(a) **கடன் மற்றும் இதர கடன் வசதிகள்**: பணக் கடன், இருப்புக்கு மேல் எடுப்பு, காசோலை மற்றும் பில் (உள்நாடு & வெளிநாடு) வாங்குதல் / தள்ளுபடி செய்தல், **கடனுறுதிக் கடிதத்தில்** (உள்நாடு & வெளிநாடு) வரையறுக்கப்பட்ட ஆவணங்களின் பரிவர்த்தனை போன்ற நிதிசார் சேவைகள். **கடனுறுதிக் கடிதம்** (உள்நாடு & வெளிநாடு) (D/P or D/A) அளித்தல், **வங்கி உத்தரவாதம்** (உள் நாடு&வெளி நாடு) அளித்தல், உள்நாடு & வெளிநாடு பில்கள் மற்றும் காசோலைகள் ஏற்றுக் கொள்ளுதல் இணைந்து **பில்களை** ஏற்றுக் கொள்ளுதல், **பில்களின் சிறப்பு மேற்குறியீடு,** வாங்குபவருக்கு கடன் வசதிகள் முதலிய நிதி சாரா சேவைகள்.

(b) அந்நியச் செலாவணி நிர்வாக சட்டம், 1999 (FEMA) பணமாற்றம் உட்பட இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறிகள் இவைகளுக்குட்பட்டு அந்நியச் செலாவணிச் சேவைகள்.

(a) எங்களது கிளைகள் மற்றும் / அல்லது எங்களது அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அல்லது பிரதிநிதிகள் மூலம் சந்தைப்படுத்தப்படும் மூன்றாம் நபர் காப்பீடு மற்றும் முதலீட்டுப் பொருட்கள்

(b) **கடனைக் காசாக்க (பணமாக்கும்) பகுக்கும் சேவைகள்**

(c) **வர்த்தகச் சேவைகள்**

தடிமனாக உள்ள வார்த்தைகளின் அர்த்தம் சொற்களஞ்சியத்தில் (பின்னால் இணைக்கப்பட்டுள்ளது) காண்க.

2. முக்கிய பொறுப்புகள்

2.1. உங்களுக்கான எங்களது முக்கிய பொறுப்புகள்

2.1.1. **உங்களுடனான எங்களின் எல்லா நடவடிக்கைகளிலும் நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ள**

(a) குறைந்தபட்ச வங்கி வசதிகளான பணம் / காசோலை வழங்குதல், ஏற்றுக்கொள்ளுதல் போன்றவைகளை வங்கி முகப்புகளில் அளித்தல்

(b) துரிதமான திறமையான கடன் அளிப்பு, மற்றும் சேவைகள்

(c) நாங்கள் வழங்கும் பொருட்களிலும், சேவைகளிலும், எங்கள் அணுகுமுறைகளிலும், பழக்கவழக்கங்களிலும் இந்நெறித் தொகுப்பில் சொல்லப்பட்டுள்ள தரத்தை நாங்கள் கடைப்பிடிப்போம்

(d) எங்களின் பொருட்களும் சேவைகளும் அதற்குரிய சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் எழுத்தாலும் எண்ணத்தாலும் கடைப்பிடிக்கப்படுவதையும் உங்களது தேவைகளுக்கேற்ப இருப்பதையும் உறுதிசெய்கிறோம்.

(e) உங்களுடனான எங்களின் நடவடிக்கைகள், நேர்மையாகவும், ஒளிவுமறைவில்லா வெளிபாட்டுத் தன்மையுடைய நன்னெறிக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்திருப்பதை உறுதிசெய்கிறோம்..

(f) பாதுகாப்பான மற்றும் நம்பகமான **பட்டுவாடா மற்றும் ஒப்பந்தத் தீர்வு** முறையை செயலாக்குதல்

(g) நிதி நெருக்கடி நிலைமைகள் வரும்போது கனிவோடு பரிசீலித்தல் (பத்தி 5.8-ஐப் பார்க்கவும்)

2.1.2 எங்களது நிதிப் பொருட்களை, சேவைகளை நீங்கள் புரிந்து கொள்ள நாங்கள் கீழ்க்கண்டவாறு உங்களுக்கு உதவுவோம்

(a) நிதிப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பற்றிய தகவல்களை இந்தி, ஆங்கிலம், பொருத்தமான உள்ளூர் மொழி ஏதேனும் ஒன்றில் அல்லது பல மொழிகளில் அளிக்கிறோம்.

(b) விளம்பரம் மற்றும் வியாபார விரிவாக்கத் தகவல்கள் தவறில்லாமல் தெளிவாக இருப்பதை உறுதி செய்கிறோம்.

(c) எங்களது பொருட்கள் / சேவைகள் பற்றிய தெளிவான தகவல்கள் உங்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்கிறோம். அதோடு சேர்த்து, அதற்குரிய விதிகள், நிபந்தனைகள், வட்டி விகிதம், சேவைக் கட்டணம் பிறவற்றையும் தெளிவாக அறிவிப்போம்.

(d) எங்களது / மூன்றாவது நபரின் பொருட்களை ஒருபோதும் தவறாக விற்பனை செய்ய மாட்டோம் என்று உறுதி கூறுகிறோம்.

(e) உங்களுக்கு நாங்கள் கொடுத்திருக்கும் வசதிகள் பற்றிய தகவல்களையும், அவைகளை நீங்கள் எப்படி பயன்படுத்தலாம், அது சம்பந்தமான கேள்விகளுக்கு / குறைகளுக்கு யாரை நீங்கள் எவ்வாறு அணுகலாம் என்ற தகவல்களை அளிப்போம்.

2.1.3 உங்கள் கணக்கை நீங்கள் உபயோகிப்பதில் உங்களுக்கு உதவ அல்லது சேவை புரிய

(a) அவ்வப்போது நாங்கள் செய்யும் பொருத்தமான மாற்றங்களை உங்களுக்கு தெரிவித்தல்

(b) வட்டிவிகிதம், கட்டணம், விதி, நிபந்தனை இவைகளில் மாற்றங்கள் செய்யப்படும்போது உடனுக்குடன் உங்களுக்கு அவைகளை அறிவித்தல்

(c) கீழ்க்கண்ட விபரங்கள் உங்களுக்கான தகவலுக்காக எங்கள் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

i. நாங்கள் அளிக்கும் சேவைகள்

ii. நடப்புக் கணக்கிற்கான குறைந்தபட்ச நிலுவைத் தேவை மற்றும் அதைப் பராமரிக்காததற்காக விதிக்கப்படும் கட்டணங்கள்

iii. உங்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தால், நீங்கள் அணுகவேண்டிய கிளையில் உள்ள அதிகாரியின் பெயர்

iv. கிளை அளவில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருந்தால், நீங்கள் அணுக வேண்டிய பிராந்திய / மண்டல மேலாளர் / முதன்மைத் தொடர்பு அதிகாரி ஆகியவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்

v. எங்களது வங்கியின் தலைமை கண்காணிப்பு அதிகாரியின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியவற்றைக் குறிப்பிடவும்

vi. சம்பந்தப்பட்ட வங்கிக்காக தொடர்பு கொள்ளவேண்டிய **வங்கிக் குறைதீர்ப்பாளரின்** பெயர் மற்றும் அவரது தொடர்புக்கான முகவரி விவரங்கள்

vii. புத்தக வடிவில் உள்ள கொள்கைகள் / ஆவணங்கள்

(d) எங்களது இணையதளத்தில் கீழ்க்கண்டவற்றைப் பற்றிய கொள்கைகள் பார்வைக்கு உள்ளன:

i. வைப்புகள்

ii. காசோலை சேகரிப்பு

iii. குறை தீர்ப்பு

iv. இழப்பீடு

v. கடன் பாக்கிகளை வசூலித்தல் மற்றும் பிணையத்தை சொந்தமாக்கிக்கொள்ளுதல்

2.1.4 தவறுகள் ஏற்படும்போது, துரிதமாகவும் கருணையோடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வசதியாக

(a) **இழப்பீட்டுக் கொள்கை** காரணமாக, நாங்கள் தவறுதலாக உங்களுக்கு ஏதேனும் வங்கிக் கட்டணத்தை விதித்திருந்தால் அதனால் நிதி இழப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால், உடனே அதை ரத்து செய்வோம்

(b) உங்களது புகாரை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை மற்றும் உங்களது புகாரை முறையான வகையில் கையாளுதல்

(c) நீங்கள் விரும்பினால் உங்கள் புகாரை மேலும் எப்படி எடுத்துச் செல்வது என்பது பற்றியும் கூறுவோம்

(d) வங்கியின் தொழில் நுட்பங்கள் சிலசமயம் தோல்வி அடையும்போது உங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளைக் களைய, பொருத்தமான மாற்று வழிகளையும் உங்களுக்கு அளிப்போம்.

2.1.5 உங்களது தனிப்பட்ட மற்றும் வணிக சம்பந்தமான தகவல்கள் அனைத்தையும் ரகசியமாக அந்தரங்கத்துடன் பாதுகாப்போம்

பத்தி 4-இல் கூறப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு, உங்களின் தனிப்பட்ட மற்றும் வர்த்தகத் தொடர்பான தகவல்களை நாங்கள் ரகசியத்தன்மையோடு அந்தரங்கமாகப் பாதுகாப்போம்.

2.1.6 நெறித் தொகுப்பை பிரசுரித்தல்

நாங்கள் உங்களுக்கு –

(a) ஏற்கனவே வாடிக்கையாளராக இருப்பின் அவரது வேண்டுகோளின் படி நெறித்தொகுப்பை இலவசமாக முகப்பில் அல்லது மின் ஊடக முறை அல்லது மின்னஞ்சல் மூலம் அளிப்போம்

(b) புதிய வாடிக்கையாளர்களுக்கு கடன் கணக்கு தொடங்கும்போது, நெறித்தொகுப்பை இலவசமாகக் கொடுப்போம்

(c) ஒவ்வொரு கிளையிலும், இணையதளத்திலும் இந்த நெறித் தொகுப்பைப் பார்த்துப் படிக்க வசதியாக அறிவிப்பு வெளியிடுவோம்

(d) எங்கள் அலுவலர்களுக்குப் போதுமான பயிற்சி கொடுத்து, நெறித்தொகுப்பு தொடர்பான அனைத்துத் தகவல்களையும் உங்களுக்கு அளித்து, அந்நெறித்தொகுப்பை அமல் செய்வோம்

(e) நெறிமுறை மற்றும் அதன் விதிகள் பற்றி வாடிக்கையாளர்களுக்கு விழிப்புணர்வை அதிகரித்திட இதர நடவடிக்கைகள் எடுத்திடுவோம்.

2.1.7 பாகுபாடில்லாக் கொள்கையை ஏற்று அமல் படுத்துதல்

வயது, இனம், பால், திருமணமானவரா இல்லையா, உடல் ஊனம், மதம் என்ற எந்த அடிப்படையிலும், நிறுவனத்தை வளர்ப்பவர், உரியவர், உடைமைக்காரர், பங்குதாரர் என்று நிறுவனங்களிடையேயும் எந்தப் பாகுபாடும் / வேறுபாடும் காட்டாமல் நாங்கள் செயல்படுவோம்.

3. தகவல்கள் – ஒளிவுமறைவற்ற தன்மை

வட்டி விகிதம், பொதுக் கட்டணம், பிரத்யேக கட்டணம் போன்ற தகவல்களைக் கீழே கண்டுள்ள ஏதேனும் ஒன்று அல்லது பலவற்றின் வாயிலாக நீங்கள் பெறமுடியும்.

(a) எங்கள் கிளைகளையோ அல்லது உதவி--மேசை தொலைபேசியில் தொடர்பு கொள்வது
(b) எங்கள் இணைய தளத்தைப் பார்த்துப் படிப்பது
(c) எங்களால் நியமிக்கப்பட்ட அதிகாரியை அல்லது உதவி மேசை அலுவலரைத் தொடர்பு கொள்வது
(d) **கட்டணப் பட்டியலைப்** (பத்தி 3.3.ஐப் பார்க்கவும்) பார்த்துத் தெரிந்து கொள்வது. ஒவ்வொரு கிளையிலும், இணைய தளத்திலும் இப்பட்டியல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது

3.1 பொது

நாங்கள் உங்களுக்கு –

(a) எங்களால் குறு, சிறு தொழிலகங்களுக்கு அளிக்கப்படும் எல்லாத் திட்டங்களைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அளிப்போம்.
(b) **பொருளீட்டுக் கடன்,** குறித்த காலக் கடன், உத்தரவாதம், **பில் கழிவு / வாங்குதல்**, கடனுறுதிக் கடிதம், வட்டிவிகிதம், வட்டி கணக்கிடப்படும் முறை, கட்டணங்கள் ஆகிய அனைத்துக் கடன் மற்றும் சேவை வகைகள் பற்றிய தகவல் அளிக்கப்படும்.
(c) நீங்கள் தேர்ந்தெடுக்கும் பொருட்களையும் சேவைகளையும் உங்கள் தேவைக்கு ஏற்ற வகையில், தனிப்பயன்பாடாக அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்
(d) பொருட்களையும் சேவைகளையும் வழங்கும்போது அவற்றை ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் சொல்வோம். (உ.ம்) தானியங்கி பணம் வழங்கி எந்திரம், இணையதளம், தொலைபேசி, கிளைகள் என்று பல வழிகளாகும். அவைகளைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும் ஆவன செய்வோம்.
(e) உங்கள் அடையாளம், முகவரி பற்றிய எவ்வகையான சான்று, சட்டப்பூர்வ, ஒழுங்குமுறைக்கேற்ப எங்களது அலுவலகக் கொள்கை தேவைகளுக்கேற்ப எங்களுக்கு வேண்டும் என்பதற்கான தகவல்களை உங்களுக்கு அளிப்போம்.

3.2 வட்டி விகிதங்கள்

நாங்கள் உங்களுக்குக் கீழ்க்கண்டவற்றைப்பற்றி தகவல் அளிப்போம் –

(a) உங்களுடைய டெபாசிட் மற்றும் கடன் கணக்குகளுக்கான வட்டி விகிதங்கள்

(b) **நிலையான வட்டி விகிதங்கள்** கொண்ட கடன்கள் விஷயத்தில் கடன் ஒப்பந்தத்தின் ஷரத்துகளில் நிலையான வட்டி விகிதங்களை மாற்றி அமைக்க ஏதேனும் வழி இருந்தால், மேலும் எந்த தேதியிலிருந்து அத்தகைய மாற்றங்களை செய்யலாம் என்பது பற்றிய விவரங்கள்

(c) **மாறக்கூடிய வட்டி விகிதங்கள்** விஷயத்தில் அளிக்கப்படும் மாறக்கூடிய வட்டி விகிதம், எந்த **குறியீட்டு வட்டி** விகிதத்தோடு

இணைக்கப்பட்டுள்ளதோ, அதில் செலுத்த வேண்டிய வட்டி விகிதத்தில் அதிக தொகை அல்லது கழிவு தொகையை குறியீட்டு வட்டி விகிதத்தில் செலுத்தி உங்களது கடனுக்கான உண்மையான வட்டி விகிதத்தை தெரிவிப்பது

(d) நிலையான வட்டி விகிதத்திலிருந்து மாறக்கூடிய வட்டி விகிதத்திற்கோ அல்லது இதிலிருந்து அதற்கோ மாறும் வாய்ப்பு உங்களுக்கு உள்ளதா, அப்படியென்றால் அதற்கு என்ன கட்டணம்

(e) உங்களது கடன் கணக்குகளுக்கு நாங்கள் விதிக்கும் வட்டி மற்றும் உங்களது டெபாசிட்டுகளுக்கு நாங்கள் அளிக்கும் வட்டி இவற்றிற்கான கால இடைவெளிகள்

(f) உங்களது கடன் கணக்குகளுக்கு நாங்கள் விதிக்கும் வட்டி மற்றும் உங்களது டெபாசிட்டுகளுக்கு நாங்கள் அளிக்கும் வட்டி இவற்றை எவ்வாறு கணக்கிடுகிறோம்

3.2.1 வட்டி விகிதத்தில் மாற்றங்கள்

எங்கள் பொருட்களின் மீதான மாறும் வட்டி விகிதங்களில் குறியீட்டு வட்டி விகிதத்துடன் ஏற்படும் மாற்றங்களை 15 நாட்களுக்குள் கீழே கண்டுள்ள ஏதேனும் ஒரு வழியில் உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

i. கடிதம்
ii. மின்னஞ்சல்
iii. குறுஞ்செய்தி

மேலும், இவ்விவரத்தை எங்கள் கிளைகளில் உள்ள அறிவிப்புப் பலகைகள் மற்றும் இணையதளத்தில் வெளியிடுவோம்.

3.3 கட்டணப் பட்டியல்3.3.1 கட்டணம்

(a) நீங்கள் தேர்தெடுக்கும் எங்கள் பொருட்கள் அல்லது சேவைகள் பற்றிய எல்லா கட்டண விவரங்களையும் கூறுவோம்.

(b) எல்லா சேவைகளுக்காகவும் விதிக்கப்படும் கட்டணங்கள் **நியாயமானதாகவும்** ஒரே வகையான வாடிக்கையாளர்களுக்கு பாரபட்சமின்றியும் இருப்பதை உறுதி செய்கிறோம். மேலும், வங்கியின் நிர்வாக மன்றம் அல்லது இவ்விஷயத்தில் முடிவெடுக்க அதிகாரமளிக்கப்பட்டு எல்லா கிளைகளின் மீதும் அதிகார எல்லையுடைய உரிய அதிகாரிகளால் இக்கட்டணங்கள் அங்கீகரிக்கப்படவேண்டும்.

(c) கட்டணப் பட்டியலை இணைய தளத்திலே வெளியிடுவோம். அதன் நகலை ஒவ்வொரு கிளையிலும் நீங்கள் பார்க்க வசதி செய்து தருவோம்.

(d) இலவசமாக நாங்கள் உங்களுக்கு அளிக்கும் சேவைகளைப் பட்டியல் போட்டு கிளை ஒவ்வொன்றிலும் அறிவிப்பு செய்வோம், இணைய தளத்திலும் வெளியிடுவோம்.

(e) நீங்கள் தேர்ந்தெடுக்கும் பொருட்கள் / சேவைகள் மீதான விதிகள் நிபந்தனைகளை நீங்கள் கடைப்பிடிக்காதபொழுதும் / மீறும்பொழுதும்

விதிக்கப்படும் அபராத / தண்டனைத் தொகையையும் நாங்கள் வெளியிடுவோம்.

(f) ஒரு வங்கி / கிளை தொழில்நுட்ப ரீதியாக உயர்நிலைப்படுத்தப்படும் பொழுது, இதற்காக கட்டணம் எதையும் விதிக்க மாட்டோம்.

3.3.2 கட்டணங்களில் மாற்றம்

இந்தக் கட்டணங்களை கூட்டவோ அல்லது புதிதாக ஏதேனும் கட்டணத்தைச் சேர்க்கவோ நாங்கள் முற்படும்போது, அத்தகைய மாற்றங்கள் அமலாக்கப்படுவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் எங்கள் இணைய தளம் / கணக்கு அறிக்கை / மின்னஞ்சல் / குறுஞ்செய்திச் சேவை / கிளைகளிலுள்ள அறிவிப்பு பலகை மூலமாக அறிவிக்கப்படும்.

3.4 விதிகளும் நிபந்தனைகளும்

(a) நீங்கள் வாடிக்கையாளராகும்போது அல்லது ஒரு பொருளை அல்லது சேவையை முதன்முதலில் பயன்படுத்த விரும்பித் தேர்ந்தெடுத்தால், அதற்குரிய விதிகள் நிபந்தனைகளை உங்களுக்குச் சொல்வோம்.

(b) எல்லா விதிகளும் நிபந்தனைகளும் நியாயமானதாகவும், அதற்குரிய உரிமைகளையும் பொறுப்புகளையும் கடமைகளையும் தெளிவாக எடுத்துரைப்பவையாக இருக்கும். இவற்றைத் தெளிவாகவும் நேரிடையாகவும் எளிமையான நடையிலும் சொல்வோம்.

3.4.1 விதிகள் நிபந்தனைகளில் மாற்றம்

(a) விதிகள் மற்றும் நிபந்தனைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றிய தகவல்கள், அத்தகைய மாற்றங்கள் பயன்பாட்டிற்கு வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக கீழே கண்டுள்ள வழிகளில் ஏதேனும் ஒன்று மூலம் உங்களுக்கு கிடைக்கும்.

i. கடிதம்
ii. கணக்கு அறிக்கைகள்
iii. குறுஞ்செய்திகள்
iv. மின்னஞ்சல்

வாடிக்கையாளர்களுக்கான பொதுவான தகவல் என்றால் எங்கள் இணைய தளம் மற்றும் எல்லாக் கிளைகளிலும் உள்ள அறிவிப்பு பலகை மூலமாகவும் தகவல் அறிவிக்கப்படும்.

(b) வழக்கமாக விதிகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்கள் ஒரு மாத காலஅவகாசம் அளித்தபின் வருங்காலத்திலேயே அமல்படுத்தப்படும்.

(c) முன்னறிவிப்பு இன்றி மாற்றம் ஏதேனும் நாங்கள் செய்திருந்தால், 30 நாட்களுக்குள் மாற்றம் பற்றிய அறிவிப்பை வெளியிடுவோம். அந்த மாற்றம் உங்களுக்கு அனுகூலமாக இல்லையென்றால், 60 நாட்களுக்குள் அறிவிப்பு ஏதுமின்றி உங்கள் கணக்கை முடித்துக் கொள்ளலாம். கூடுதல் கட்டணம் அல்லது வட்டி ஏதுமின்றி கணக்கை மாற்றிக் கொள்ளவும் செய்யலாம்.

4. அந்தரங்கம் மற்றும் ரகசியம் காத்தல்

(a) உங்களது தனிப்பட்ட மற்றும் வர்த்தகத் தொடர்பான தகவல்கள் அனைத்தையும் (நீங்கள் எங்கள் வாடிக்கையாளராக இல்லாமல் போகும் போதுகூட) நாங்கள் தனித்தன்மையானதாகவும் ரகசியமானதாகவும்

பாதுகாப்போம். கீழே கண்டுள்ள கொள்கைக் குறிக்கோள்கள்படி நடந்து கொள்வோம். கீழே கண்டுள்ள விதிவிலக்கு நிகழ்வுகளில் தவிர, மற்ற பொழுதில் எல்லாம், உங்கள் கணக்குகளை பற்றிய தகவல்கள் புள்ளி விபரங்களை (அது நீங்கள் அளித்ததானாலும் மற்றவர் அளித்ததானாலும்) வெளியே சொல்லமாட்டோம்.

i. சட்டப்பிரகாரம் அத்தகவல்களை நாங்கள் சொல்ல வேண்டியிருந்தால் அல்லது வங்கியை ஒழுங்குபடுத்தும் அதிகார அமைப்பிடமிருந்து கேட்கப்பட்டிருந்தால்

ii. பொதுமக்களுக்குச் சொல்ல வேண்டிய கடமை இருந்தால்

iii. எங்கள் நன்மை கருதி சொல்ல வேண்டி இருந்தால் (உ.ம்) ஒரு மோசடியைத் தடுக்க. ஆனாலும் உங்களைப் பற்றியோ உங்கள் கணக்கைப் பற்றியோ (உங்கள் பெயர் முகவரி உட்பட) யாருக்கும் (எங்கள் குழுமத்திலுள்ள கம்பெனிகள் உட்பட) கூறமாட்டோம்.

iv. நீங்கள் எங்களை அத்தகவல்களை அளிக்கச் சொல்லி பணித்திருந்தால்

(b) உங்களது தனிப்பட்ட வர்த்தகத் தகவல்களை வியாபார விரிவாக்க சந்தை முயற்சிகளுக்காக நீங்கள் அனுமதித்தாலின்றி, நாங்களோ வேறு யாரேனுமோ பயன்படுத்த மாட்டோம்.

4.1. கடன் தகவல் அளிப்பு கம்பெனிகள் (CIC)

(a) **கடன் தகவலளிப்பு கம்பெனிகளின்** பங்கை நாங்கள் உங்களுக்குச் சொல்வோம். அவர்கள் தங்களது உறுப்பினர்களுக்கு அளிக்கும் தகவல்களின் அடிப்படையால் உங்களது கடன் பெறும் தகுதியில் ஏற்படும் தாக்கம் என்ன என்பதையும் உங்களுக்கு நாங்கள் விளக்குவோம்.

(b) எங்களிடம் நீங்கள் கணக்கு தொடங்கும்போது, உங்கள் கணக்கு பற்றிய விபரங்களைக் கடன் தகவலளிப்பு கம்பெனிகளுக்கு நாங்கள் அளிப்போம்

(c) சீரான இடைவெளியில், எங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் குறித்த திருத்தப்பட்ட தகவல்களை நாங்கள் கடன் தகவலளிப்பு கம்பெனிகளுக்கு அளிப்போம்.

(d) கடன் தகவலளிப்பு கம்பெனிகளுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் உங்களின் தனிநபர் கடன்கள் குறித்து பின் வருவனவற்றையும் அடக்கியதாக இருக்கும்.

(i) நீங்கள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் கடனைத் திருப்பித் தரவில்லை.

(ii) உங்களின் கடன் நிலுவை குறித்து சச்சரவு உள்ளது.

(e) கடன் தவணைகள் திருப்பித்தருவதில் நீங்கள் தவறியிருந்து பின்னர் அதை சரி செய்திருப்பின் அது பற்றி கடன் தகவலளிப்பு கம்பெனிகளுக்கு அடுத்த முறை தகவலளிக்கும் போது தெரிவிக்கப்படும்.

(f) உங்களின் கடன் நிலுவை குறித்து சீரான இடைவெளியில் கடன் தகவலளிப்பு கம்பெனிகளுக்கு தகவல் அளிப்போம். அதுவும் குறிப்பாக உங்களின் கடன் நிலுவை ‘தரம் தாழ்ந்த’ நிலையிலிருந்து தரமான

நிலையை அடையுமானால் / தவணை தவறிய நிலையிலிருந்து ' சீரான நிலை'க்கு வந்த உடனே / எங்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் உங்களின் கடன் கணக்கு ஒழுங்குபடுத்தப்பட்டு / முடிக்கப்படுமானால் அதுபற்றி தெரிவிப்போம்.

(g) நீங்கள் எங்களிடமிருந்து கடன் பெற விண்ணப்பிக்கும் போது, கடன் தகவலளிப்பு கம்பெனிகளிடமிருந்து (CIC) உங்களைப் பற்றி நாங்கள் பெற்ற விவரங்களை நீங்கள் கேட்டால், கட்டணத்தின் பேரில், அதன் நகல் ஒன்றை நாங்கள் உங்களுக்கு அளிப்போம்.

(h) நீங்கள் 'ஒரு முறை தீர்வு' முறையில் எங்களிடம் கடன் தீர்வு செய்து மற்றும் எங்களிடம் உள்ள உங்கள் கணக்கை முடித்துக் கொள்ளும்பொழுது, கடன் தகவல் அளிப்பு கம்பெனிகளிடம் உங்களைப் பற்றிய மோசமான கடன் தகவல் பதிவின் விளைவுகள் மற்றும் எதிர்காலத்தில் எங்களிடம் அல்லது மற்ற வங்கிகளிடம் கடன் வாங்குவதற்கான வாய்ப்பு பற்றியும் நாங்கள் உங்களிடம் விளக்குவோம்.

5. கடன் வழங்கல்

(a) எங்களது கடன் கொள்கை என்பது தேசீயக் கொள்கை மற்றும் ஒழுங்கீட்டாளர் விதிக்கும் கட்டளைகளுக்கு ஏற்பவே இருக்கும். ஒற்றை சாளர வழியே அனைத்து சேவைகளையும் அளிக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்வோம்.

(b) **குறு சிறு தொழிலகங்களுக்கான** மற்றும் **புனரமைப்பிற்க்கான** எங்கள் கொள்கையை எங்கள் இணைய தளத்தில் வெளியிடுவதுடன், ஒவ்வொரு கிளையிலும் நீங்கள் பார்க்கும்படியாக வெளியிடுவோம். நீங்கள் விரும்பிக் கேட்டால், குறைந்த கட்டணத்தில் அதனை உங்களுக்குக் கிடைக்கச் செய்வோம்.

(c) குறு சிறு தொழிலகங்களுக்கான கடன் உத்தரவாத நிதிக்காப்பு மையம், அதன்திட்ட அம்சங்கள், அதனால் விளையும் பலன்கள், உரிய கட்டணங்கள், நிபந்தனைகள் ஆகியவற்றை உங்களுக்குத் தெரிவிப்போம். இத்திட்டம் (CGTSME) தகுதியுடைய அனைத்து வங்கிகள் மூலமாக செயல்படுத்தப்படும். நடப்பிலிருக்கும் குறு சிறு தொழிலகங்களுக்கும் (சேவை நிறுவனங்கள் உட்பட, ஆனால் சிறு வாணிபம், கல்வி நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் நீங்கலாக) புதிய குறு சிறு தொழிலகங்களுக்கும் அதிக பட்சமாக ரூ.100 லட்சம் (ரூபாய் நூறு லட்சம் மட்டும்) கடன் எல்லை வரை இத்திட்டம் பயன்தரும்.

(d) உங்கள் கடனுக்கு, ஏதேனும் கடன் உத்தரவாதத் திட்டம் அல்லது கடன் மானியத் திட்டம் கிடைக்குமாயின், அது பற்றியும் அதற்கான நிபந்தனைகளையும் மற்றும் அதற்காக நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டியவைகளையும் உங்களுக்குத் தெரிவிப்போம்.

(e) வருங்காலத்தில் கடன் வாங்குவோர்களின் நிதி நிர்வாகத்திறனை மேம்படுத்த நிகழ்ச்சிகள் நடத்திட முயற்சிகள் மேற்கொள்வோம்.

(f) குறு சிறு தொழிலகங்களுக்கான கடனாளிகளுக்காக அவ்வப்போது கூட்டங்கள் நடத்தி கருத்து மற்றும் ஆலோசனைப் பரிமாற்றங்களுக்கு வழிவகை செய்வோம்.

5.1. விண்ணப்பம்

நாங்கள் உங்களுக்குப் பின்வருவனவற்றை அளிப்போம் –

(a) எளிமையானதாகவும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதுமான சீரான கடன் விண்ணப்ப படிவங்களை உங்களுக்கு இலவசமாக அளிப்போம்.

(b) கடன் விண்ணப்பத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து எங்களிடம் சமர்பிக்க வசதியாக, சரிபார்க்கும் பட்டியல் ஒன்றையும் விண்ணப்பப் படிவத்துடன் அளிப்போம். சட்ட மற்றும் ஒழுங்கீட்டாளர் விதிக்கும் நிபந்தனைகளுக்கு ஏற்ப இது அமையும். தேவைப்பட்டால், படிவத்தை பூர்த்தி செய்ய உங்களுக்கு நாங்கள் உதவுவோம்.

(c) கடன் விண்ணப்பப் படிவங்களை உங்களுக்கு அளிக்கும்போதே, நீங்கள் கேட்கும் கடனுக்குரிய வட்டி விகிதம் (வருடாந்திர வட்டி விகிதம்) மற்றும் பிற கட்டணங்கள், பரிசீலனைக் கட்டணம், தவணைக் காலத்திற்கு முன்னரே கடன் அடைக்க வசதி உண்டா இல்லையா, உண்டெனில் கட்டணம், மேலும் CGTMSC உத்தரவாத வசதி உண்டா போன்ற அனைத்து விவரங்களையும் உங்களுக்கு அளித்து, மற்ற வங்கிக் கட்டணங்களோடு அர்த்தமுள்ள வகையில் ஒப்பிட்டு, தெளிந்த முடிவாக நீங்கள் எடுக்க வசதிகள் ஏற்படுத்தித் தருவோம்.

(d) கடன் விண்ணப்பத்தை நேரடியாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ எவ்வாறு அளித்தாலும், அந்த விண்ணப்பத்தின் மீதான முடிவு எடுக்கப்படும் கால அளவை தெரிவித்து ஒரு ஒப்புகை அளிக்கப்படும்.

(e) பரிசீலனைக்குத் தேவையான அனைத்து விவரங்களையும் சாதாரணமாக உங்களிடமிருந்து விண்ணப்பப் படிவத்துடனேயே பெற்றுக் கொள்வோம். ஒரு வேளை எங்களுக்குக் கூடுதலான தகவல்கள் தேவைப்பட்டால், விண்ணப்பம் கிடைத்த 7 நாட்களுக்குள் உங்களை நாங்கள் தொடர்பு கொள்வோம்.

(f) ஏற்கனவே கடன் வசதி பெற்ற ஒருவர் அந்தக் கடன் கணக்கை திருப்திகரமாக நடத்தியிருப்பின், அதைப் புதுப்பிக்கும் சமயம், எங்கள் வசம் இல்லாத கூடுதல் விவரங்களை மட்டுமே கேட்போம்.

(g) நீங்கள் விண்ணப்பித்து நாங்கள் அனுமதித்த கடன் வசதிகளுக்குரிய "மிக முக்கிய நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளை (MITC)" உங்களுக்கு அளிப்போம்.

(h) உங்கள் மனு எந்த நிலையிலுள்ளது என்பதை அறிந்து கொள்ள வசதி செய்து தர முயற்சிப்போம்.

(i) ரூ.5 லட்சம் வரை, அது வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டபோதும் அல்லது மறுக்கப்பட்டபோதும் அதற்குப் பரிசீலனைக் கட்டணம் என்று ஏதும் வாங்கமாட்டோம்.

(j) மனுக்கள் பெற்ற நாளிலிருந்து இருவார காலத்திற்குள் ரூ.5 லட்சம் வரை புதிய அல்லது ஏற்கனவே உள்ள கடன் வரம்பை உயர்த்தப்பெற்ற

மனுக்கள் மீது முடிவுகள் எடுக்கப்படும். ரூ. 5 லட்சத்திற்கு மேல் ரூ. 25 லட்சம் வரையுள்ள மனுக்கள் மீது 3 வார காலத்தில் முடிவு எடுப்போம். ரூ. 25 லட்சத்திற்கு மேல் உள்ள மனுக்கள் மீது 6 வார காலத்தில் முடிவு எடுப்போம். கடன் மனுக்கள் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டு, சரிபார்க்கும் பட்டியலில் கூறப்பட்டுள்ளபடி அனைத்து ஆவணங்களும் இணைக்கப் பட்டிருந்தால் மட்டுமே இந்தக் கால வரம்பு பொருந்தும்.

5.2. கடன் மதிப்பீடுa. நாங்கள் உங்களுக்குப் பின்வருவனவற்றை அளிப்போம் –

i. உங்கள் வியாபார முகவரிக்கோ / இல்லத்திற்கோ எங்கள் பணியாளர் அல்லது அதற்கென்று எங்களால் நியமிக்கப்பட்ட கம்பெனிகள் வந்து, உங்கள் விண்ணப்பத்தில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையா என்று விசாரிப்பர்.

ii. உங்களுக்குக் கடன் கொடுக்குமுன் அல்லது உங்கள் இருப்புக்கு மேல் எடுக்கும் வசதி வரம்பை உயர்த்துமுன் அல்லது உங்களது கடன் வாங்கும் அளவைக் கூட்டுமுன், உங்களது திருப்பிச் செலுத்தும் சக்தி பற்றி மதிப்பீடு செய்வோம். மிகுந்த கவனத்துடன் உங்கள் கடன் மனுவினை பரிசீலித்து, உரிய மதிப்பீடு செய்வோம்.

iii. வருங்காலத் திட்டத்திற்காக நீங்கள் அளித்துள்ள யூக மதிப்பீடுகள் நியாயமானவையா என்று ஆராய்ந்து திருப்தியடைவோம்.

iv. உங்களின் கடன் தேவைகளை மதிப்பீடு செய்யும்போது, உங்கள் வியாபாரத்தின் பொங்கும் / மங்கும் கால அளவீடுகள், அவற்றின் சுழற்சி இவற்றைப் பொறுத்து அதிக / குறைந்த அளவு கடன் வரையறைகள் நிர்ணயிக்கப்படும்.

b. இது குறித்து நியாயமான மதிப்பீடுகளை செய்திட கீழ்க் கண்ட தகவல்களை அளிக்க வேண்டுகிறோம்.

i. நீங்கள் கடன் வாங்கும் காரணம்

ii. உங்கள் வியாபாரத் திட்டம்

iii. உங்கள் வியாபாரப் பணப்புழக்கம், இலாபம், தற்போதைய நிதிப் பொறுப்புகள் – தேவைப்பட்டால் ஆதாரமாகக் கணக்கு அறிக்கைகள்

iv. உங்களது தனிப்பட்ட நிதிப் பொறுப்புகள்

v. கடந்த காலங்களில் நீங்கள் எப்படி நிதியைக் கையாண்டீர்கள்

vi. கடன் தகவல் அளிப்பு மையங்களிலிருந்து எங்களுக்கு கிடைத்த தகவல்கள்

vii. கடன் தர நிர்ணய கம்பெனிகள் அளிக்கும் தர அளவீடுகள், ஏதேனும் இருந்தால்

viii. கடன் கொடுப்போர் / மற்றவர்கள் அளிக்கும் தகவல்கள்

ix. சந்தை அறிக்கைகள்

x. கடனுக்குப் **பிணையமாக** இயந்திரங்கள் அல்லது ஏதேனும் அசையாச் சொத்து அளிக்கப்படுமாயின், வங்கியின் பட்டியலில் உள்ள பொறியாளர் அதன் மதிப்பீட்டு அறிக்கையையும், வழக்கறிஞர் இது குறித்த சட்ட ஆய்வு அறிக்கையையும் அளிக்கவேண்டும்.

xi. கடனுக்கு CGTSME அளிக்கும் உத்தரவாத வசதி ஏதேனும் இருக்குமானால், அதன்படி காப்பீடு செய்துகொள்ள வாடிக்கையாளர் ஒப்புக் கொள்கிறாரா என்பதைக் கேட்டு அறிவோம்.

xii. வேறு ஏதாவது தொடர்புடைய தகவல்கள்

c. நாங்கள் உங்களுக்குப் பின்வருவனவற்றை அளிப்போம் –

i. கடன் ரூ.10 லட்சம் வரை அல்லது அவ்வப்போது ரிசர்வ் வங்கி குறிப்பிடும் வரம்பு வரை, துணைப் பிணையத்தை நாங்கள் கேட்க மாட்டோம்.

ii. உங்களது நிதி நிலைமை நன்றாகவும் பலமாகவும் இருப்பின், உங்களது நடவடிக்கைகள் எங்களுக்குத் திருப்தி அளிப்பதாக இருந்தால், ரூ.25 லட்சம் வரையிலான கடன்களுக்கு உங்களுக்கு பிணையமில்லாக் கடன் வசதி தருவது பற்றி பரிசீலிப்போம்.

iii. கடன் தேவை வரம்பு ரூ.100 லட்சத்திற்குள் இருந்தால், அதன்படி நாங்கள் அளிக்கும் கடன் வசதி CGTSME அளிக்கும் கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் வரத் தகுதி உடையதானால், அதன்படி செயல்பட உங்களுடைய சம்மதத்தைக் கோருவோம். நீங்கள் சம்மதிக்கும் பட்சத்தில், நாங்கள் துணைப் பிணையத்தை அல்லது மூன்றாம் நபர் உத்தரவாதத்தை வலியுறுத்த மாட்டோம். இந்த ரூ.100 லட்சம் கடன் வசதி எங்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, CGTSME திட்டத்திற்கான வாய்ப்பிருந்து அதற்கு நீங்கள் ஒப்புதல் அளித்திருக்கவேண்டும்.

iv. குறு மற்றும் சிறு (உற்பத்தி) தொழிலகங்களுக்கு நடப்பு மூலதன அளவு, எதிர்கால விற்பனை அளவு மதிப்பீட்டில், குறைந்தது 20% என்ற அடிப்படையில் கணக்கிடப்படும்.

v. நீங்கள் நடப்பு மூலதன அளவை உயர்த்துமாறு கோரிக்கை வைத்தால், உற்பத்திப் பொருட்களின் அளவு, எப்போது எதிர்கால அளவு மதிப்பீட்டைத் தாண்டி அதிகமாகிறதோ, அப்போது அத்தகைய தொழிலகங்களுக்கு அதைப் பரிசீலிப்போம். அல்லது ஒருவேளை நடப்பு மூலதனம் முதலில் தேவைக்கும் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது என்பதை நீங்கள் ஆதாரத்துடன் எடுத்துரைத்தால், அப்போதும் நடப்பு மூலதனத்தை உயர்த்தும் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

d. உத்தரவாதங்கள்

உங்களது பொறுப்புகளுக்கு வேறு ஒருவர் கொடுக்கும் பிணையம் அல்லது உத்தரவாதத்தை நாங்கள் ஏற்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், உங்கள் நிதி தொடர்பான அந்தரங்கமான தகவல்களை அவருக்கு அல்லது அவரது சட்ட ஆலோசகருக்குச் சொல்ல உங்கள் அனுமதியைக் கேட்போம். மேலும் நாங்கள் –

i. அவர்களது கடமை பொறுப்பினை அவர்கள் உணர்ந்து கொள்ள வசதியாக அவர்களாகவே சட்ட வல்லுநரின் அறிவுரையைப் பெற்றுக் கொள்ள அவர்களை ஊக்குவிப்போம். அவர்களது முடிவினால் ஏற்படும் பாதிப்புகளை அவர்கள் அறிந்து கொள்ளவும் இது உதவும். (எந்த ஆவணத்தில் அவர்களின் கையெழுத்தை நாங்கள்

கேட்கிறோமோ, அதில் இந்தப் பரிந்துரை நன்கு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்)

ii. உத்தரவாதமும் பிணையமும் கொடுப்பதால், நீங்கள் அல்லது உங்கள் நிறுவனம் பெற்றுள்ள கடனுக்கு உரிய பொறுப்பினை உங்களைப் போலவே அவர்கள் ஏற்க நேரிடலாம் என்பதை அவர்களிடம் சொல்வோம்.

iii. கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளின் நகல் / நீங்கள் வாங்கிய கடன் ஒப்பந்தத்தின் நகல் ஆகியவற்றை உத்தரவாதம் அளித்தவருக்கு கொடுக்க வேண்டும்.

iv. உங்களின் கேட்புக்கடன் / குறித்தகாலக் கடன் இவற்றிற்கான ஆண்டுக்கணக்கு அறிக்கையின் நகலை உத்தரவாதம் அளித்தவருக்கு கொடுக்க வேண்டும்.

5.3 ஒப்புதல் / மறுத்தல்

(a) உங்களுக்குக் கடன் வழங்க ஒப்புதல் அளிப்பதற்காக, உங்களை எந்தவொரு வைப்பும் எங்களிடம் கட்டாயமாக வைக்கச் சொல்லி நாங்கள் நிபந்தனை ஏதும் விதிக்க மாட்டோம். ஒன்றுக்கு ஒன்றை மாற்றாகக் கேட்கமாட்டோம்.

(b) இருப்புக்கு மேல் எடுக்கும் வசதியை உங்களுக்குப் புதிதாக அளிக்கும் போதோ, அல்லது ஏற்கனவே உள்ள அந்த வசதியின் வரம்பெல்லையை உயர்த்தும்போதோ, இருப்புக்கு மேல் நீங்கள் எடுத்த தொகை, கேட்டவுடன் அல்லது எப்படி திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கூறுவோம்.

(c) கடன் வசதி தொடர்பான நெறிமுறைகள், நிபந்தனைகள், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் மற்ற குறிப்புகள் அனைத்தும் எழுத்து மூலமாக ஒப்புக்கொள்ளப்பட்டு முறையாகக் கையொப்பமிடப்பட்டு சான்றளிக்கப்பட்ட ஆவணத்தின் நகலை உங்களுக்கு அளிப்போம்.

(d) சரியானதென்று உறுதிசெய்யப்பட்ட அனைத்து கடன் ஆவணங்களின் சான்று நகல்கள், அதன் இணைப்புகள், அதன் பட்டியல்கள் என்று அனைத்திற்கும் எங்கள் செலவில் சான்று நகல்கள் அளிப்போம்.

(e) நீங்கள் விண்ணப்பித்த கடன் எங்களால் மறுக்கப்படும்போது எங்கள் முடிவிற்கான காரணங்களை நாங்கள் எழுத்து மூலம் தெரிவிப்போம்.

(f) தர நிர்ணயத்தை நாங்கள் பின்பற்றுவோம், அதன் அளவீடு விபரங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வோம்

(g) நிலையான வட்டி விகிதத்தில் அளிக்கப்படும் ரூ.50 லட்சம் வரையிலான கடன் தொகையை தவணைக் காலத்திற்கு முன்னரே திருப்பிச் செலுத்தும் வசதியை எந்த அபராதக் கட்டணமும் இன்றி அனுமதிப்போம்.

(h) மாறுபடும் வட்டி விகிதத்திலான கடனைத் தவணைக் காலத்திற்கு முன்னரே திருப்பிச் செலுத்திட, எந்த அபராதக் கட்டணமும் இன்றி அனுமதிப்போம்.

(i) கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டபின் கடன் தொடர்பான விதிமுறை நிபந்தனைகளை பின்பற்றிய நாளிலிருந்து இரு வேலை நாட்களில் அக்கடன் வழங்கப்படுதலை உறுதி செய்கிறோம்.

(j) கடன் உளவடைப்புப் பட்டியல் (கடனுக்குரிய காலத்திற்குள் அசல் மற்றும் வட்டி திருப்பித்தரும் விளக்கப்பட்டியல்) உங்களுக்குத் தரப்படும்.

(k) உங்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறை நிபந்தனைகள்படி அவ்வப்போது மறு ஆய்வும் தேவையானால் புதுப்பிக்கக் கூடிய வசதியையும் அளிக்க உறுதி கூறுவோம்.

5.4 மையப்பதிவேடு

நீங்கள் எங்களிடம் கடன் வாங்கும்பொழுது மையப்பதிவேடு ஒன்று இருப்பதையும், அவர்களிடம் எல்லா ஆவணங்கள் இருப்பதையும் நாங்கள் எடுத்துரைப்போம். இதனால் எந்தவொரு கடனாளி அல்லது சொத்தில் பரிவர்த்தனை செய்யவிரும்புபவர் இங்கு தகவல்களை தேடிப்பெறலாம்.

5.5 கடன் வழங்கிய பின்னர்

நாங்கள் உங்களுக்குப் பின்வருவனவற்றை அளிப்போம் –

(a) கடன் வழங்கு ஒப்புதல் ஆணையின்போது அதில் சொல்லப்பட்ட அல்லது கடன் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட வகையில் அன்றி, அல்லது வங்கிக்கு புதிய/ மோசமான தகவல் கிடைத்தாலன்றி நாங்கள் உங்கள் வியாபாரத்தில் தலையிடமாட்டோம்.

(b) கண்காணிப்பு வேலைகள் மேற்கொள்ளும்போது ஆக்கபூர்வமாகவும், உங்களது நியாயமான கஷ்டங்களை கனிவோடு பார்த்தும் நடவடிக்கை எடுப்போம்.

(c) வேறு ஏதாவது கடன் அளிக்கும் நிறுவனத்திடமிருந்து பின்னர் நீங்கள் கடன் வாங்கியிருந்தால் அதுகுறித்து எங்களுக்குத் தகவல் தரவேண்டியது அவசியம்.

(d) தொடர்ந்து உங்களிடமிருந்து கீழேகண்ட தகவல்களைப் பெற்றுக் கொண்டேயிருப்போம்.

i. சீரான இடைவெளியில் உங்களின் பொருள் இருப்பு நிலை அறிக்கைகள் மற்றும் இதர அறிக்கைகள்.

ii. வருங்காலத்தில் உங்கள் வியாபாரத்தில் அதன் எதிர்கால இலக்குகள், அம்முயற்சியில் நீங்கள் அடைந்திட்ட வெற்றிகள் என்ற இரண்டையும் ஒப்புநோக்கிப் பார்த்தல்

iii. உங்கள் வியாபாரத் திட்டத்தில் ஏற்படுகின்ற முக்கிய நிகழ்வுகளில் முன்னேற்றம்

iv. நிதிநிலை அறிக்கை, லாப நட்டக்கணக்கு போன்ற ஆண்டு கணக்கு அறிக்கைகள் மற்றும் துணை ஆவணங்கள்

v. உங்களுக்குக் கடன் கொடுத்தவர்கள் / உங்களின் கடனாளிகள் குறித்த (வயது வாரியாக / தொகை வாரியாக) விபரங்கள்

(e) வழக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஒப்ப உங்களுக்கு அளிக்கப்பட்ட வரம்பெல்லைக்குள் பணம் எடுத்தலை அனுமதிப்போம்.

(f) உங்களது வர்த்தக சூழ்நிலைகள் மாறினால், எங்களுக்கு ஏதேனும் புதிய தகவல்கள் தேவையானால் அதுபற்றி உங்களுடன் பேசுவோம்.

(g) உங்களின் கடன் கணக்கை ஒரு வங்கி / நிதிநிறுவனத்திடமிருந்து வேறொரு வங்கி / நிதிநிறுவனத்திற்கு மாற்ற விரும்பலாம். அப்போது அது குறித்த விண்ணப்பம் உங்களிடமிருந்தோ அல்லது அக்கணக்கை ஏற்றுக் கொள்ளப்போகும் வங்கி / நிதிநிறுவனத்திடமிருந்தோ எங்களுக்கு கிடைத்தால், அது கிடைத்த இருவார காலத்திற்குள் அது பற்றிய எங்கள் முடிவைத் தெரிவிப்போம்.

(h) ஒப்புக்கொள்ளப்பட்ட / ஒப்பந்தப்படி கடன் தொகை முழுவதுமாகத் திருப்பிச் செலுத்தப்பட்டால் உடனடியாக அதிகபட்சம் 15 நாட்களுக்குள் பிணையப் பத்திரங்கள் அனைத்தையும் திருப்பி அளிப்போம். பிணையப் பத்திரங்களைப் பைசல் செய்யும் உரிமையை அமல்படுத்தும்போது முன்னறிவிப்பு செய்வோம். உங்களுக்கு எதிரான எங்கள் பிற கேட்புரிமைகள் பற்றியும் அறிவிப்பு செய்வோம். ஒரு குறிப்பிட்ட கேட்பு பைசலாகும் வரை அல்லது திருப்பி அடைக்கப்படும்வரை ஆவணங்கள் / பத்திரங்களை நாங்களே வைத்திருப்பது பற்றியும் கூறுவோம்.

(i) உங்கள் கோரிக்கை கிடைத்த அதே நாளில் அடமானம் / வழங்கல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்வோம்.

(j) நீங்கள் எங்களிடம் பிணையப் பொருளை ஒப்படைத்த 24 மணி நேரத்திற்குள் உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட அளவில், பணம் எடுக்கும் வரம்பெல்லையை உயர்த்துவோம்.

(k) நீங்கள் கையாளும் கணக்குகளின் அறிக்கைகளை அவ்வப்போது அளிப்பதோடு, உங்களின் கேட்புக் கடன் / குறித்தகாலக் கடன் இவற்றிற்கான ஆண்டுக் கணக்கு அறிக்கைகளையும் அளிப்போம்.

(l) கடன் அறிக்கை உங்களுக்கு அடிக்கடி தேவைப்படுமானால் அதை கட்டணப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள கட்டணத்தின் பேரில் அளிப்போம்.

(m) நீங்கள் அடைந்துள்ள வியாபார முன்னேற்றத்தை கீழே கண்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழிகளில் கண்காணிப்போம் –

i. உங்கள் சரக்குகள் / பொருட்கள் கையிருப்பு பற்றிய அறிக்கையை அவ்வப்போது பரிசீலித்தல்

ii. எங்களுடனான உங்களின் கணக்கு நடவடிக்கைகளைக் கண்காணித்தல்

iii. உங்கள் சரக்குகள் / பொருட்கள் கையிருப்பு மற்றும் உங்கள் சொத்துக்களின் மதிப்பின் உண்மை நிலை அறிய அவ்வப்போது எங்கள் அலுவலர் அல்லது எங்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியை உங்கள் வளாகத்திற்கு அனுப்புவோம்.

iv. உங்கள் வியாபாரம் எப்படி நடைபெறுகிறது என்பதைத் தேவைப்பட்டால் சந்தை நிலவர அறிக்கை பெற்று அறிவது

(n) உங்களின் கடன் கணக்கு தொடர்பான பரிவர்த்தனைகள் சீராக இல்லாமல், **வாராக்கடனாக** அது மாறக்கூடிய அறிகுறிகள் தென்படுமானால், அதன் நிலை குறித்து பரிவர்த்தனை தொடர்பானதை

மட்டுமன்றி இதர தர அளவீடுகள், நிலைப்பாடுகள் குறித்தும் கடிதம் / மின்னஞ்சல் / குறுஞ்செய்தி மூலம் உங்களுக்கு உரிய காலத்தில் எச்சரிக்கைத் தகவல்கள் தெரிவிப்போம்.

(o) உங்களின் கடனை வசூலிக்க முயற்சிகளில் ஈடுபட்டாலோ தவணைகளை மாற்றியமைத்தாலோ, கடன் ஒப்பந்தப்படி நடவடிக்கை எடுத்தாலோ, கூடுதலாகப் பிணையம் கேட்டாலோ, உங்களுக்கு முன்கூட்டியே அறிக்கை அனுப்புவோம்.

5.6 நிதிசாரா அடிப்படையிலான வசதிகள்

மூலதனக் கருவிகள், உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருட்கள், பயன்படுத்தப்படும் பொருட்கள் முதலியவைகளை வாங்க உங்களுக்கு கடன் உறுதிக்கடிதம் வழங்குதல், ஆலோசனை வழங்குதல் போன்ற நிதிசாரா வசதிகளை நாங்கள் உங்களுக்குத் தரலாம். கடன் உறுதிக்கடிதங்கள் மற்றும் உத்தரவாதங்கள் உள்நாட்டு சட்டவிதிகள் மட்டுமின்றி, பன்னாட்டு வர்த்தக முனையம் அவ்வப்போது வெளியிடும் இது தொடர்பான விதிமுறைகளுக்கும் உட்பட்டதாகும். 5**.7 காப்பீடு**

(a) நாங்கள் ஏதாவது ஒரு காப்பீட்டு நிறுவனத்தின் கம்பெனியாக செயல்பட்டு ஏதாவது காப்பீடு அளிக்கும்பட்சத்தில் அது குறித்து உங்களுக்குத் தெரிவிப்போம்.

(b) இதற்கு காப்பீடு வசதிகளை உங்களுக்கு அளிக்கும் முன் எழுத்துப் பூர்வமான உங்களின் ஒப்புதல் இருப்பதை உறுதி செய்து கொள்வோம்.

(c) உங்களின் கடனுக்கான அடமானப் பொருட்கள் ஏதேனும் எங்களிடம் இருப்பின், அவற்றிற்கு ஒரு குறிப்பிட்ட காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து காப்பீடு பெறவேண்டுமென்று வலியுறுத்த மட்டோம்.

5.8 நிதி நெருக்கடி

நாங்கள் எவ்வாறு உதவுவோம்?

5.8.1 கனிவோடு, பரிவோடு ஆக்கப்பூர்வமாக உங்கள் நிதிநெருக்கடி நிலைமைகளை நாங்கள் பரிசீலிப்போம். நீங்கள் பிரச்சனைகளைச் சாதாரணமாக அடையாளம் காணும்போதே, கூடுமானவரை எவ்வளவு விரைவில் எங்களுக்குத் தெரியப்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் அதனைத் தெரியப்படுத்துங்கள். எங்களுக்கும் பிரச்சனைகள் தெரிய வந்தால் எழுத்து மூலம் உங்களுக்கு அறிவிக்கிறோம். விரைவான அறிவிப்பு முக்கியமெனில் தொலைபேசி, நகலனுப்பி, மின் அஞ்சல் முறைகளிலும் உங்களைத் தொடர்பு கொள்ள முயல்வோம்.

5.8.2 நடப்பவைகளை நீங்கள் எங்களுக்கு அறிவிக்கவில்லையெனில், அவற்றில் எங்களுக்கு எவை முக்கியமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பது பற்றி சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(a) வியாபார உற்பத்தியைத் தொடங்குவதில் காலதாமதம் அல்லது அதற்கான செலவு எதிர்பார்த்ததைவிட அதிகமாக உயருதல்

(b) நீங்கள், உங்களின் சரக்குகள் கையிருப்பு, புதுப்பிக்கும் சில தகவல்கள், மற்றும் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் போன்றவற்றை அவ்வப்போது அளிப்பதில் அதிகமான கால தாமதம்

(c) உங்களின் பணக் கடன் / நடப்புக் கணக்குகளில் காசோலைகள் பணமின்றி திரும்புவது அதிகமாதல்

(d) நீங்கள் ஒப்புக்கொண்ட பணம் எடுக்கும் வரம்பெல்லையை அடிக்கடி மீறி, மேற்கொண்டு அதிகமாகப் பணம் எடுப்பது

(e) உங்கள் வர்த்தக விற்பனை / உற்பத்தி ஆகியவற்றில் உங்கள் விளக்கம் இல்லாத வகையில் பெரிய மாற்றங்கள் ஏற்படுதல்

(f) நியாயமற்ற முறையில் அதிகமான கால அளவிற்கு வேலை நிறுத்தி வைக்கப்பட்டு அல்லது தொடராமல் முடக்கப்பட்டு இருத்தல்

(g) உங்களின் வர்த்தகத்தில் இழப்பு ஏற்பட்டிருந்தால்

(h) திடீரென்று உங்கள் வியாபாரப் பங்காளி அல்லது உங்களுடன் தொழில் தொடங்கியவர் அல்லது முக்கிய வாடிக்கையாளர் அல்லது ஊழியர் / பணியாளர் உங்களிடமிருந்து விலகுதல்

(i) உங்களுடைய வியாபாரத்தில் மிக முக்கிய நடவடிக்கையை மாற்றுதல் அல்லது பெரும் பங்கை விற்பது

(j) எங்களுடன் ஒப்புக்கொண்ட காரணங்கள் தவிர மற்ற வழிகளில் நீங்கள் கடன் வசதியைப் பயன்படுத்துவது அல்லது சொல்லப்பட்ட வியாபாரத்திற்கு அல்லாமல் மற்ற காரியங்களுக்கு நிதியை பயன்படுத்துவது

(k) நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளிகளில் நீங்கள் வட்டி கட்டத் தவறுவது

(l) கடனை திருப்பி அடைப்பதில் ஒப்புக்கொள்ளப்பட்ட காலக் கெடுவை கடைபிடிக்காமல் இருத்தல்

(m) வாடிக்கையாளர்கள் மேல் எப்பட்ட பில்கள் பணம் அளிக்கப்படாமல் அடிக்கடி திருப்பி அனுப்பப்படுதல்

(n) உங்களுக்கு பொருள்/சேவை வழங்குபவர்கள் உங்களுக்கு அனுப்பிய பில்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்படாமல் அடிக்கடி திருப்பி அனுப்புதல்.

(o) உங்கள் சார்பாக எங்களால் வெளியிடப்பட்ட உத்தரவாதங்களை நாங்கள் அடிக்கடி செயல்ப்படுத்த நேரிடல்

(p) உங்கள் கணக்கில் தெரியும் விற்பனை அளவுக்குப் பொருத்தமில்லாமல் உங்கள் கடன்கள் / உங்களுக்குக் கடன் வழங்கியவர்களின் அளவு அதிகமாக இருப்பது

(q) விற்று வரும் தொகை உங்களது கணக்கின்மூலமாக அனுப்பப்படுவதில்லை

(r) கடன் ஒப்பந்தத்தில் போடப்பட்டுள்ள நிபந்தனைகளைக் கடைபிடிப்பதில்லை

(s) ஒப்புக்கொள்ளப்பட்ட தகவலை உரிய நேரத்தில் அளிக்காதிருப்பது

(t) உங்களுக்குக் கடன் கொடுத்த மற்றொருவர் / நிறுவனம் உங்கள் வியாபாரத்தை மூடச் சொல்லும் மனுவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தால் அல்லது உங்கள் வியாபாரம் மீது சட்டரீதியான ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்தல்

5.8.3 உங்களது நெருக்கடிகளிலிருந்து நீங்கள் மீள எங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்வோம். உங்களது ஒத்துழைப்போடு, நிதிநெருக்கடி-களிலிருந்து எப்படி மீளுவது என்பது பற்றி உங்களுக்குத் திட்டம் ஒன்றைத் தீட்டுவோம். நாங்கள் ஒப்புக் கொண்டதை எழுத்து மூலம் உங்களுக்குச் சொல்வோம்.

5.8.4 கடன் அடைபட கலந்தாலோசித்துத் தக்க அறிவுரைகள் வழங்கி, உங்களுக்கு ஏற்பட்ட நிதிநெருக்கடியைச் சமாளிக்க பெரிதும் உதவுவோம்.

5.8.5. a. நீங்கள் கஷ்டத்திலிருந்தால், நீங்கள் கேட்டுக்கொண்டால் உங்கள் ஆலோசகரோடு சேர்ந்து செயல்படுவோம். எங்கள்மீது நன்னம்பிக்கையோடு நீங்கள் நடந்து கொள்வதும், அவ்வப்போது ஏற்படும் நிகழ்வுகளை எங்களுக்கு நீங்கள் சொல்வதும் மிகவும் முக்கியமாகும். எங்களோடு செய்து கொண்ட ஒப்பந்தப்படி நடப்பதும், மாற்றங்கள் ஏதேனும் தேவைப்படுமானால் அவைகளை முன்கூட்டியே கணித்துச் செய்யத் தயாராக உள்ளோம் என்பதையும் அறிந்து செயல்பட வேண்டும்.

b. கூடுதலான நிதித் தகவல்களையும் உங்கள் பொறுப்புகள் பற்றியும் நாங்கள் கேட்கலாம். உங்கள் பிரச்சனைகளை நன்கு அறிந்து கொண்டு உங்களோடு சேர்ந்து செயலாற்ற எங்களுக்கு நாங்கள் கேட்கும் விபரங்களை அளிக்க வேண்டும்.

5.9 நலிவடைந்த குறு, சிறு தொழிலகங்களைப் புனரமைப்பதும், கடன் மறுகட்டமைப்புச் செய்தலும்

5.9.1 சென்ற நிதியாண்டில் 50 சதவிகிதத்திற்கும் மேல் சேர்த்து வைக்கப்பட்ட இழப்புகளால் **நிகர மதிப்பில்** தேய்மானம் ஏற்பட்டுஅல்லது உங்களது கடன் கணக்கு செய்லபடாத கணக்காக மூன்று மாதங்களுக்கு இருப்பது போன்ற காரணத்தால், கடன் திட்டத்தைப் பாதுகாப்பதற்கும் / புனரமைப்பதற்கும் நாங்கள் பரிசீலிப்போம்.

5.9.2 உங்களுடைய கடன் பாதுகாப்பு / புனரமைப்புத் திட்டத்தின் வேண்டு-கோளுக்காக நாங்கள் –

(a) உங்களது திட்டம் / தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்திட சாத்தியமுள்ளதா சாத்தியத்திற்கான வாய்ப்புள்ளதா என்பது பற்றி, உங்களது தொழிற்சாலை நலிவடைந்த மூன்று மாதங்களுக்குள் ஆய்ந்து அறிவுறுத்துவோம்.

(b) உங்களது தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்திட சாத்தியமுள்ள / சாத்தியத்திற்கான வாய்ப்புள்ளதாகக் கண்டறியப்பட்டால் அதனுடைய மீட்சிக்குக் காலத்தோடுகூடிய நடவடிக்கையைத் தொடங்கிவைப்போம்.

(c) ஒரு வேளை உங்களது தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்திட சாத்தியத்திற்கான வாய்ப்பிருந்து அது ஒரு தொகுப்பில் / பல வங்கிகள் இணைந்த நிதிஏற்பாட்டில் இருந்தால், அதில் எங்களுக்கு அதிகபட்ச பங்கிருக்கும் பட்சத்தில், புனரமைப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(d) **புனரமைப்புத் திட்டம்** ஒன்றினை உருவாக்குவோம். ரிசர்வ் வங்கியின் அறிவுரைகளுக்கு ஏற்ப, உங்கள் பங்களிப்பையும் அதில் சேர்த்து அந்தப் புனரமைப்புப் பணியினை அளிப்போம். உங்கள் கோரிக்கை கிடைக்கப்பெற்ற 60 நாட்களுக்குள், புனரமைப்புப் பணியை அமல்படுத்துவோம்.

(e) ஒருவேளை உங்களது தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்திட சாத்தியம் இல்லாதபட்சத்தில், உங்கள் தரப்பு வாதத்தை எங்களது அடுத்தகட்ட அதிகார அமைப்பிடம் எடுத்துச் சொல்ல உங்களுக்கு வாய்ப்பளிப்போம்.

5.9.3 புனரமைப்புத் திட்டம் வெற்றிபெறாது என்று நாங்கள் கருதினால், அதற்கான காரணங்களை உங்களுக்கும் உங்கள் ஆலோசகருக்கும் விளக்கி, மற்ற வழிகளை நீங்கள் தேர்வுசெய்ய உதவுவோம்.

5.9.4 நாம் ஒரு உடன்படிக்கைக்கு வரமுடியாதபோது, ஏன் உங்களுக்கு நாங்கள் தொடர்ந்து உதவ இயலாது என்பதைச் சொல்வோம். எப்பொழுது எங்கள் நிதி ஆதரவை விலக்கிக் கொள்வோம் என்பதையும் எடுத்துரைப்போம்.

5.10 ஒருமுறைத் தீர்வு

(a) ஒரு வேளை வங்கி, "ஒருமுறைத் தீர்வு" திட்டத்திற்கு முன் வந்தால் அதுபற்றி வங்கியின் இணையதளத்தில் பெருத்த விளம்பரம் அளிக்கப்படும். மற்றும் இதர வழிகளிலும் பரப்பப்படும்.

(b) ஒரு வேளை நாங்கள் ஒருமுறைத் தீர்வை உங்களுக்கு அளிக்க முன்வந்தால் அதுபற்றிய விவரங்களை உங்களுக்குத் தெரிவிப்போம்.

(c) உங்களுக்கு அளிக்கப்படும் ஒருமுறைத் தீர்விற்கான விதிகள் மற்றும் நியதிகள் பற்றி எழுத்துமூலமாக உங்களுக்கு அளித்திடுவோம்.

(d) நாங்கள் உங்களுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்திடவும், பாக்கித் தொகையைச் செலுத்திடவும் நியாயமான நேரத்தை அளிப்போம். இதனால் இத்திட்டத்தின் நன்மைகளை நீங்கள் பெறமுடியும்.

(e) ஒருமுறைத் தீர்வு ஒப்புக்கொள்ளப்பட்டால், கடன் தகவல் நிறுவனங்கள் [Credit Information Company (CIC)] பராமரிக்கும் உங்களின் கடன் வரலாறு பற்றிய தகவல்களில் அத்தகைய தீர்வு ஏற்படுத்தும் தாக்கங்களைப் பற்றி உங்களிடம் விளக்குவோம்.

5.11 கடன்களை / பாக்கிகளை பாதுகாப்பு பத்திரமாக்குதல்

(a) வேறொரு அமைப்பிற்கு உங்களது கடன்களையும் / பாக்கிகளையும் மாற்றும்(விற்பனை) செய்யும்பொழுது, நாங்கள் உங்களுக்கு அந்த அமைப்பின் தொடர்பு விவரங்கள் மற்றும் மாற்றப்பட்ட உங்களது கடன் / பாக்கிகள் பற்றியும் தெரிவிப்போம். சாதாரணமாக தர அளவீட்டுக்குட்படாத கடன்கள் / பாக்கிகள் தனித்திட்டத்தின் கீழ் சொத்து மறுசீரமைப்பு நிறுவனத்திற்கு (Asset Reconstruction Company – ARC) விற்கப்படுகின்றன.

(b) அப்படியிருக்கும்பட்சத்தில் எந்த அமைப்பிற்கு கடன் / பாக்கிகள் மாற்றப்பட்டதோ அந்த அமைப்பிற்கு நீங்கள் கொடுக்கவேண்டிய மொத்தத் தொகையை செலுத்தவேண்டியிருக்கும்.

(c) கடன் / பாக்கிகளை ஒரு அமைப்பிற்கு மாற்றும்பொழுது அந்த அமைப்பு உங்களது கடன் தகவலை கடன் தகவல் நிறுவனத்திற்கு (CIC) தொடர்ந்து அனுப்பும்.

(d) உங்களது கடன் / பாக்கிகளை மாற்றிக்கொடுத்த அமைப்பு தொடர்பாக உங்களுக்குக் குறைகள் ஏதேனும் இருக்குமேயானால், அது விஷயத்தில் உங்களுக்கு உதவிட நாங்கள் முயற்சிப்போம்.

6. கடன் பாக்கியை வசூலித்தல் மற்றும் பிணையத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் கொள்கை

6.1. கடன் பாக்கியை வசூலித்தல்

(a) எப்பொழுதெல்லாம் நாங்கள் கடன் அளிக்கிறோமோ, அப்பொழுதெல்லாம் அக்கடனைத் திருப்பி அடைக்கும் முறை பற்றி விரிவாகச் சொல்வோம். திருப்பி அடைக்க வேண்டிய தவணைத் தொகை, கடனின் கால அளவு, மொத்தக் கடனையும் திருப்பி அடைக்க ஆகும் கால அளவு என்று அனைத்து விபரங்களையும் கூறுவோம். ஆயினும், நீங்கள் திருப்பி அடைக்கும் கால அட்டவணையைப் பின்பற்றாமல் இருந்தால், நாட்டிலுள்ள சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, வரையறுக்கப்பட்ட ஒரு முறையை, கடன் பாக்கியை வசூலிக்கப் பின்பற்றுவோம்.

(b) கடன் பாக்கியை மற்றும் பிணையத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளுதல் மற்றும் வசூல் முகவர்களை நியமித்தல் ஆகியவற்றுக்கு நிர்வாக மன்றம் ஒப்புதல் அளித்த கொள்கைகளை கடைபிடிப்போம்.

(c) வசூல் முகவர்களை நியமனம் செய்வதில் அனைத்து தொடர்பு சட்டங்கள், நியதிகள், வழிகாட்டு நெறிகள் மற்றும் அங்கீகாரத்திற்கான அல்லது உரிமத்திற்கான அல்லது பதிவுக்கான முறைகள் ஆகியவை கருத்தில் கொள்ளப்படும்.

(d) எங்களது வசூல் முகவர்கள் தங்களது பொறுப்புகளை கவனத்துடனும் பாதுகாப்புடனும் கையாண்டிட அவர்களுக்கு முறையான பயிற்சி

அளிக்கப்படும். அவர்கள் தங்களது வரம்புக்கு மீறி செயல்படாமலிருப்பதை நாங்கள் உறுதி செய்கிறோம்.

(e) இந்த நடைமுறையில் பிணையத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் முன், உங்களுக்கு ஒரு அறிவிப்பு அனுப்பப்படும். அல்லது நேரடியாக உங்களை சந்தித்து அந்த முடிவுபற்றி உங்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

(f) தவணை தவறும்போது, அதுபற்றி வசூல் முகவரிடம் தெரிவிப்போம். வசூல் நடவடிக்கைகள் தொடங்கிவிட்டதை உங்களுக்குத் தெரிவிப்போம்.

(g) வசூலிக்கும் முறையைத் தொடங்கும்பொழுதே, அதைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் புகார் இருப்பின், எங்களது உதவித் தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளலாம்.

(h) எங்களது வசூல் முகவர்கள் நியாயமற்ற முறையில் நடந்து கொண்டதாக நீங்கள் எழுப்பும் புகார்களையும் நாங்கள் விசாரணை செய்வோம். வங்கியின் பிரதிநிதியோ / வசூல் முகவரோ முறையற்ற வகையில் நடந்து கொண்டாலோ, நெறிமுறைக் கோட்பாடுகளை மீறி நடந்தாலோ அது பற்றி உங்களிடமிருந்து ஏதாவது புகார் வந்தால், அதை ஆய்வு செய்து, எங்களின் முடிவுகளை, புகார் கிடைத்த 30 நாட்களுக்குள் உங்களுக்குத் தெரிவிப்போம். இதனால் ஏதாவது இழப்பு ஏற்பட்டிருந்தாலும் அது நியாயமாக இருக்கும்பட்சத்தில், அதற்கான இழப்பீட்டினை அளிப்போம்.

6.2. கடன் பாக்கியை வசூலித்தல் மற்றும் பிணையத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் கொள்கை

சட்டத்திற்கு ஏற்ப கடன் பாக்கியை வசூலித்தல் மற்றும் பிணையத்தை சொந்தமாக்கிக்கொள்ளுதல் கொள்கையை நாங்கள் பின்பற்றுவோம். இந்தக் கொள்கை எங்களது இணையதளத்தில் வெளியிடப்படும் மற்றும் எங்களது கிளைகளில் இதன் பிரதி பார்வைக்காக வைக்கப்படும்.

(a) எங்களது வசூலிக்கும் கொள்கை என்பது நாகரீகத்தையும் கண்ணியத்தையும், நியாயமான நடவடிக்கைகளையும், ‘எடுத்துரைத்து இணங்கச் செய்யும் முயற்சி’களையும் அடிப்படையாகக் கொண்டது. வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும், அவர்களோடு நெடுங்கால சுமுக உறவை ஏற்படுத்திக் கொள்வதுமே எங்கள் எண்ணமும் செயலுமாக இருக்கும். எங்கள் கொள்கையின் அம்சங்கள்.

i. நீங்கள் கட்ட வேண்டிய தொகை பற்றிய முழு விபரங்களும் உங்களுக்கு அளிப்போம். நீங்கள் திருப்பிக் கட்டவேண்டிய தொகை பற்றிய போதுமான கால அவகாசத்துடன் முன்கூட்டியே உங்களுக்கு அறிவிப்போம்.

ii. உங்களுக்கு எதிராக வசூல் நடவடிக்கைகளைத் தொடங்கும்போது அதனை மேற்கொள்ளும் வசூல் முகைமை / முகவர் பெயர், முகவரி மற்றும் அவரது தொலைபேசி எண்கள் ஆகியவை கொடுக்கப்படும்.

iii. நாங்கள் நியமித்துள்ள முகவர்கள் / நிறுவனங்கள் குறித்த விவரங்களை எங்கள் இணையதளத்தில் வெளியிடுவோம்.

iv. நீங்கள் வேண்டினால் மேலும் சில விவரங்களை எங்கள் வங்கிக் கிளைகளிலும் கிடைக்குமாறு செய்வோம்.

v. கடன் வசூலிக்க அல்லது பிணையத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள நியமிக்கப்பட்ட எங்கள் அலுவலர் தன்னை இன்னார் என்று அறிமுகப்படுத்திக்கொள்வர். எங்களது பிரதிநிதியாக, எங்களால் நியமிக்கப்பட்டவர் தன்னை இன்னார் என்று அறிமுகம் / அடையாள அட்டை மற்றும், நாங்கள் அவர்களுக்கு இது தொடர்பாக அளித்துள்ள அதிகாரபூர்வ கடிதத்தையும் காட்டுவர்.

vi. எங்கள் தரப்பில் ஏதாவது செய்யத் தவறியதால், நீங்கள் துன்பத்திற்கு ஆளாகக் கூடாது என்ற நோக்கத்தில், தவணை தவறிய கணக்குகளை வசூல் முகவர்களிடம் ஒப்படைக்கும் முன் சில பரிசீலனை முறைகளைப் பின்பற்றுவோம்.

(b) கடன் வசூலிக்க அல்லது பிணையத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள எங்கள் பிரதிநிதியாக வரும் எங்கள் பணியாளர் அல்லது நியமிக்கப்பட்ட நபர் மிகுந்த கவனத்துடனும் நியாயமாகவும் கீழே கூறப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றுவார்கள்.

i. உங்கள் வியாபார / தொழில் இடத்தில் உங்களைச் சாதாரணமாகத் தொடர்பு கொள்வர். அது முடியாமல் போகும்போது உங்கள் வீட்டில் அல்லது உங்கள் பிரதிநிதியின் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் ஒரு இடத்தில் தொடர்பு கொள்வர்.

ii. முதன் முதலில் தங்களை இன்னார் என்று அறிமுகம் செய்து கொண்டு, எங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளத்தையும் காட்டுவர்.

iii. உங்களது தனிப்பட்ட ரகசியம் மற்றும் கவுரவம் மதிக்கப்படும்.

iv. உங்களுடன் பேசித் தொடர்பு கொள்வது என்பது சாத்வீகமான, கண்ணியமான முறையிலேயே இருக்கும்.

v. உங்கள் வியாபாரத்தின் பிரத்யேகச் சூழ்நிலை காரணமாக அல்லது உங்கள் தொழில் நேரம் வேறுவிதமாக இருந்தாலொழிய, சாதாரணமாக எங்கள் பிரதிநிதிகள் 07.00 மணியிலிருந்து 19.00 மணி வரைதான் உங்களைத் தொடர்பு கொள்வர்.

vi. உங்களை அழைக்க ஒரு குறிப்பிட்ட நேரம் அல்லது இடம் தவிர்த்திட நீங்கள் எங்களைக் கேட்டுக் கொண்டால், கூடுமானவரை அதை மதித்துச் செயல்படுவோம்.

vii. நேரம், எத்தனை முறை அழைப்பு விடுக்கப்பட்டது, உரையாடலின் உள்ளடக்கம் என்று உங்களுடனான தொடர்பு ஆவணங்களாக்கப்படும்.

viii. கடன் பாக்கி தொடர்பான சச்சரவுகளையும் வேறுபாடுகளையும் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு நேர்மையான முறையில் தீர்த்துவைக்க எல்லாவித உதவிகளையும் நாங்கள் செய்வோம்.

ix. வசூலுக்காக உங்கள் இடத்திற்கு வரும்போது நாகரீகத்தையும் கண்ணியத்தையும் கடைப்பிடிப்போம். எங்களது அதிகாரிகள் / முகவர்கள் வாய்ச்சொல் அல்லது உடல் ரீதியாகவோ எவ்வித தொல்லை அல்லது எவ்வித துன்புறுத்தலையும் மற்றும் அவமானத்தையும் உங்களுக்கோ அல்லது குடும்பத்தாருக்கோ அல்லது உங்கள் நண்பர்களுக்கோ, உங்களை நன்கு அறிந்தவர்களுக்கோ செய்யமாட்டோம். நாங்கள் ஒருபோதும் மிரட்டும் / அனாமதேய தொலைபேசி அழைப்புகளை செய்யமாட்டோம். மேலும் தவறான கேட்புகளை மற்றும் கோரிக்கைகளை வைக்கமாட்டோம்.

எனினும் உங்களைத் தொடர்பு கொள்வதற்கான விவரங்களை அவ்வப்போது புதுப்பிப்பது உங்களது கடமையாகும். ஒருவேளை வங்கியால் உங்களைத் தொடர்புகொள்ள முடியவில்லையென்றால், வங்கி பொது வழிகள் மூலம் தகவலைத் தேடும். மற்றும் உங்களைக் கண்டுபிடிக்க உங்களது நண்பர்கள் / சொந்தங்களை வங்கி அணுகும்.

x. குடும்பத்தில் ஒருவர் இறந்துள்ள நேரம் / நாள் போன்ற துக்கச் சூழ்நிலைகள் நிலவும் நாட்களில் உங்களிடம் வசூல் தொடர்பாகத் தொடர்பு கொள்ளுதல், இவ்விடத்திற்கு வருதல் போன்ற பொருத்தமற்ற செயல்களைச் செய்வதைத் தவிர்ப்போம்.

....

.

அருஞ்சொற்களஞ்சியம்

சிறப்பு மேற்குறியீடு அளித்தல் (Avalaisation)

முதிர்வுநாளில் ஒரு பில் / வரைவோலை மீது பணமளிக்க வேண்டிய (இறக்குமதியாளர்) நபர் தவறும்பட்சத்தில், அதைக்கொடுப்பதாக உறுதி அளிக்கும்வகையில், வங்கி சிறப்பு மேற்குறியீட்டை சேர்க்கும்.

வங்கி உத்தரவாதம் (Bank Guarantee)

வங்கி தனது வாடிக்கையாளர் சார்பில் ஒரு மூன்றாம் நபருக்கு உத்தரவாதப் பொறுப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகையை, அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'பொறுப்பை' வாடிக்கையாளர் அவ்விடத்தில் நிறைவேற்றத் தவறினால், தருவதாக அளிக்கும் வாக்குறுதியே வங்கி உத்தரவாதம் எனப்படும்.

வங்கிக்குறை தீர்ப்பாளர் (Banking Ombudsman)

வங்கி அளிக்கும் சில சேவைகளில் ஏற்படும் குறைபாடுகள் குறித்த வாடிக்கையாளர்களின் புகார்களைக் கையாள, ரிசர்வ் வங்கியால் ஏற்படுத்தப்பட்ட தனியானதொரு சச்சரவு சமரச அதிகாரியே வங்கிக் குறைதீர்ப்பாளர்.

பில்கள் (Bills)

மாற்றுமுறிகள், வாக்குறுதிச் சீட்டு போன்ற நிதியியல் மாற்று செலாவணி உபகரணங்கள் “பில்கள்' எனப்படும். பொருளை விற்பவர், தான் விற்ற பொருளுக்கு அல்லது செய்த சேவைக்கு ஈடான தொகையை வாங்குபவர் தரும்படி அளித்திடும் ஆணை 'மாற்று முறி' எனப்படும். 'வாக்குறுதிச் சீட்டு' என்பது பொருளை வாங்குபவர், தான் பெற்ற பொருளுக்கு அல்லது அளிக்கப்பட்ட சேவைக்கு ஈடான தொகையை விற்பவருக்கு அளித்திட மேற்கொள்ளும் உறுதிமொழி ஆகும்.

பில் வாங்குதல் / தள்ளுபடி (Bill purchase/Discount)

பில்களைப் பிணையமாக, ஏற்று, பொருளை விற்பவருக்கு அதற்குரிய தொகைக்கான 'கேட்பு/ சலுகை பில்கள்' மீது கடன் வழங்கும் ஏற்பாடாக உள்ள நடவடிக்கையே பில் வாங்குதல் / தள்ளுபடி என்பதாகும். 'கேட்பு பில்கள்' வாங்கப்படும். 'சலுகைக்கான பில்கள்' தள்ளுபடி செய்யப்படும்.

பொருளீட்டுக்கடன்/இருப்புக்கு மேல் எடுப்பு (Cash Credit/Overdraft)

பொருளீட்டுக்கடன் / இருப்புக்கு மேல் எடுப்பு என்பது ஒரு வகையான கடன் வசதியாகும். முன்னரே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு வரையறைக்குள், தேவைப்படும் அளவிற்கு கடன் வாங்க, கடனாளிக்கு சுதந்திரம் வழங்கப்படுகிறது.

இந்தக் கணக்கில் பணம் வரவுவைக்கப்பட்டால், விதிக்கப்பட்ட வரையறைக்குள், அவ்வப்போது புதிதாய் பணத்தை எடுக்கமுடியும். கடன் வரையறை என்பது இதில் சுழற்சி முறை கடன் வசதியாக அளிக்கப்படுகிறது. கடனில் நிலுவையில் இருக்கும் தொகைக்கு வட்டியை வங்கி வசூலிக்கிறது.

இழப்பீட்டுக் கொள்கை (Compensation Policy)

இழப்பீட்டுக் கொள்கை என்பது வங்கியின் செயல்பாட்டாலும், சிலவற்றை செய்யாமல் விடுவதாலும் வாடிக்கையாளருக்கு ஏற்படும் பண நஷ்டத்தை ஈடு செய்வதற்காக வங்கி பின்பற்றும் கொள்கையைக் குறிப்பதாகும்.

கடன் வசதிகள் / வங்கிக் கடன் (Credit facilities / Bank Loan)

வங்கியிலிருந்து கிடைக்கும் கடன்வசதிகள் என்பது, குறித்த காலக் கடன், இருப்புக்குமேல் எடுப்பு. பொருளீட்டுக்கடன் என்று எந்த வகையிலும் இருக்கலாம். இதில் பொருளீட்டுக்கடன் என்பது வங்கியால் வாடிக்கையாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அளிக்கப்பட்டு, அதில் நிலுவையிலுள்ள தொகைக்கு வட்டி வசூலிக்கப்படும்.

கடன் தகவல் கம்பெனிகள் (Credit Information Companies)

இவை, கம்பெனிகள் சட்டம் 2005-ன்கீழ் அமைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கியால் பதிவுச் சான்றிதழ் அளிக்கப்பட்ட கம்பெனிகள் ஆகும். தமது அங்கத்தினர்களாக உள்ள கடன்வழங்கும் நிறுவனங்களிடமிருந்து, கடன் குறித்த தகவல் பெறவும் அவற்றைப் பகுப்பாய்வு செய்து, அங்கத்தினர்களுக்கும் குறிப்பிட்ட பயனாளிகளுக்கு வழங்கவும் இக் கம்பெனிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

கடனைக் காசாக்கப் (பணமாக்க) பகுத்தல் (Factoring)

வர்த்தகத்தில் வரவேண்டிய தொகைகளை நிர்வாகம் செய்வதில் உள்ள நிதியியல் விருப்பத் தேர்வே ‘கடனைக் காசாக்கப் பகுத்தல்’ எனப்படும். இது கடன் விற்பனையைப் பணமாக மாற்றும் முறையாகும்.

நிலையான வட்டிவிகிதம்

நிலையான வட்டிவிகிதம் என்பதன் பொருள், ஒரு கடனின் காலம் முழுமைக்கும் வட்டிவிகிதம் நிலையாக இருக்கலாம் அல்லது அதன் ஒப்பந்தத்தில் உள்ள மாறுபாடு குறித்த ஷரத்துப்படி, குறிப்பிட்ட கால இடைவெளியில் வட்டிவிகிதம் மாற்றப்படலாம்.

மாறுபடும் வட்டிவிகிதம்

இதில் கடன்மீதான வட்டிவிகிதம் நிலையாக இருக்காது. ஒரு குறியீட்டு விகிதத்தோடு அது இணைக்கப்பட்டு விடும். குறியீட்டு விகிதம் மாறும் போதெல்லாம், வட்டிவிகிதமும் மாறும்.

உத்தரவாதம் (Guarantee)

ஒரு நபர் அளிக்கும் வாக்குறுதி உத்தரவாதம் எனப்படும்.

கடன்உறுதிக் கடிதம் (Letter of Credit)

கடன் உறுதிக் கடிதம் என்பது வங்கி வெளியிடும் ஒரு ஆவணம். அதில் குறிப்பிட்டுள்ளபடி, சில ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்போது, பயனாளிக்கு வங்கி பணமளிப்பதாக, மாற்ற இயலாத ஒரு பொறுப்பேற்பு உறுதிமொழியை அளிக்கிறது.

குறு மற்றும் சிறு தொழிலகங்கள் (Micro and Small Enterprises)

குறு மற்றும் சிறு தொழிலகங்கள் என்பவை பொருட்கள் தயாரித்தல் அல்லது சேவைகள் அளித்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களைக் குறிக்கும்.

ஒரு குறு தொழிலகம் என்பது பின்வருமாறு விளக்கப்படுகிறது

ஏதோவொரு தொழிலை சார்ந்த பொருட்களின் உற்பத்தி/தயாரிப்பில் ஈடுபட்டுள்ள அதன் ஆலை / இயந்திரத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடு ரூ. 25 லட்சத்திற்கு அதிகமில்லாமல் உள்ள நிறுவனம் ஆகும்.

அல்லது

சேவைகள் புரியும் ஒரு நிறுவனம் அதற்கு தேவையான சாதனங்களில் செய்துள்ள முதலீடு ரூ. 10 லட்சத்திற்கு அதிகமில்லாத நிறுவனம் குறு தொழிலகம் எனப்படும்.

ஒரு சிறு தொழிலகம் என்பது பின்வருமாறு விளக்கப்படுகிறது

ஏதோவொரு தொழிலை சார்ந்த பொருட்களின் உற்பத்தி/தயாரிப்பில் ஈடுபட்டுள்ள அதன் ஆலை / இயந்திரத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடு ரூ. 25 லட்சத்திற்கு மேலும் ரூ. 5 கோடிக்கு அதிகமில்லாமலும் உள்ள நிறுவனம் ஆகும்.

அல்லது

சேவைகள் புரியும் ஒரு நிறுவனம் அதற்கு தேவையான சாதனங்களில் செய்துள்ள முதலீடு ரூ.10 லட்சத்திற்கு மேலும் ரூ. 2 கோடிக்கு அதிகமில்லாமலும் உள்ள நிறுவனம் சிறு தொழிலகம் எனப்படும்.

நிகர மதிப்பு (Net worth)

மூலதனம் மற்றும் இருப்புகள் இரண்டையும் சேர்ந்த கூட்டுத் தொகையிலிருந்து நஷ்டம் மற்றும் கண்ணுக்குப் புலப்படா சொத்துக்களைக் கழித்தால், மிஞ்சுவது நிகரமதிப்பு எனப்படும்.

நிதிசாரா வசதிகள் (Non-Fund based facility)

நிதிசாரா வசதிகள் என்பவை வங்கிகளிலிருந்து பணம் வெளியே போகாமல் செய்து கொடுக்கப்படும் சில வசதிகளைக் குறிக்கும். இவ்வகையான வசதிகளில், உடனடியாக வங்கிக்கு பணப்பொறுப்பு ஏதுமில்லாவிடினும், வாடிக்கையாளர் இந்த வசதியைப் பயன்படுத்தி, அவர் பொறுப்பினை செயல்படுத்த தவறிடும் நேரத்தில், வங்கிக்கு பணப் பொறுப்பை அது ஏற்படுத்திவிடும். நிதிசாரா வசதிகள் என்பவை பொதுவாக வங்கி உத்தரவாதம் அல்லது கடன் உறுதிக்கடிதம், ஏற்புகள் என்ற வடிவில் அளிக்கப்படும்.

வருமானம் ஈட்டா சொத்து (Non-Performing Asset)

வருமானம் ஈட்டா சொத்து என்பது பின்வரும் வகையான வங்கிக் கடன்களைக் குறிக்கும்

ஒரு குறித்தகாலக் கடனின் வட்டி மற்றும் முதல் சேர்ந்த தவணை 90 நாட்களுக்குமேல் நிலுவையில் இருப்பவை.

ஒரு ஒழுங்கில் செயல்படாத “இருப்புக்குமேல் எடுப்பு / பொருளீட்டுக் கடன் கணக்குகள்.

வாங்கப்பட்ட அல்லது தள்ளுபடி செய்யப்பட்ட பில், 90 நாட்களுக்கு மேல் கொடுக்கப்படாமல் இருப்பின் அவை

சீராக செயல்படாநிலை (Out of Order Status)

ஒரு கணக்கில் நிலுவையில் உள்ள தொகை, அக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட/ எடுக்க அதிகாரமுள்ள வரம்பை விட அதிகமாகவே தொடர்ந்திருந்து வருமானால், அது சீராக செயல்படாநிலையை அடைந்துவிட்டதாகக் கருதலாம். ஒரு நிறுவனத்தின் முக்கிய செயல்பாட்டுக்

கணக்கில் உள்ள நிலுவைத் தொகை, அனுமதிக்கப்பட்ட / எடுக்க அதிகாரமுள்ள வரம்பை விடக் குறைவாக இருக்கலாம். ஆனால், ‘சொத்து பொறுப்பு அறிக்கை‘ நாளுக்கு முன்னதாகத் தொடர்ந்து, 90 நாட்களுக்கு வரவுகள் ஏதுமின்றி, அல்லது வந்துள்ள வரவுகள் அந்த காலகட்டத்திற்குரிய வட்டிக்கு கூட கட்டிவரவில்லை என்றால், அந்தக் கணக்குகள் ‘சீராக செயல்படாநிலையை’ அடைந்துவிட்டதாகக் கருதலாம்.

காலக்கெடு தாண்டியவை (Overdue)

வங்கி அளித்துள்ள எந்தவொரு கடன் வசதியின்படியும் வங்கிக்கு கொடுக்க வேண்டிய தவணைத்தொகை, வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் கொடுக்கப்படாவிடில், அவை காலகெடு தாண்டியவையாகக் கருதப்படும்.

பட்டுவாடா மற்றும் தீர்வு முறை (Payment and Settlement System)

நிதியியல் நிறுவனங்கள் தமக்குள்ளே பற்றுகள் மற்றும் வரவுகளை மாற்றிக் கொள்வதன்மூலம், பணத்தை அளிப்பவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்களிடையே பணமாற்றத்தை செய்திடும் வகையில் அமைக்கப்பட்ட நிதியியல் முறைமையே ‘பட்டுவாடா மற்றும் தீர்வு’ முறை ஆகும்.

தனிநபர் அடையாள எண் (PIN)

தனிநபர் அடையாள எண் என்பது ஒரு ரகசிய எண். இதை பற்று/கடன் ATM அட்டையுடன் பயன்படுத்தி பணம் எடுக்க, பொருட்கள்/சேவைகள் இவற்றை வாங்கிட மற்றும் வங்கி அளிக்கும் மின்னணு சேவைகளைப் பெற்றிடமுடியும்.

நேரிய (Reasonable)

சீரியசிந்தனை ஓட்டமுடைய, பகுத்தறிவுடன் கூடிய, இவற்றால்ஆளப்படுகின்ற, பொது அறிவின் எல்லைக்கு உட்பட்ட, நியாயமான; அதிகமாகவும் இல்லாமல், குறைவாகவும் இல்லாமல்.

குறியீட்டு வட்டிவிகிதம் (Reference Rate)

இது வங்கிகள் வைத்துள்ள அடையாளக் குறியீட்டு விகிதமாகும். மாறுபடும் வட்டிவிகித அடிபபடையில் அளிக்கப்பட்ட கடன்மீதான வட்டிவிகிதம் இதனுடன் இணைக்கப்படும். அந்தந்த வங்கியின் கொள்கைக்கேற்ப இக் குறியீட்டு விகிதம் தீர்மானிக்க/மாற்றப்படும்.

அடமானச் சொத்தை கைப்பற்றல் (Repossession)

கடன் ஒப்பந்தப்படி கடனாளி கடனைத் திருப்பித் தராவிட்டால், கடனுக்காக அடமானமாக வைத்த வீடு, பொருட்கள் (உம். கார்) போன்றவற்றை கடன்கொடுத்தவர் கைப்பற்றிக் கொள்ளும் முறையே அடமானத்தைக் கைப்பற்றல் எனப்படும்.

புனரமைப்புத் திட்டம் (Rehabilitation Package)

புனரமைப்புத் திட்டம் என்பது ஒரு நலிவுற்ற நிறுவனத்தை புனரமைத்திட செய்யப்படும் திட்டமாகும். இது இந்திய ரிசர்வ் வங்கி வரையறுத்துள்ளபடி வடிவமைக்கப்பட வேண்டும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

நடப்பு முதலீடு – ஒழுங்குமுறை அறிவுறுத்தல்களின்படி விதிக்கப்பட்டுள்ள வட்டிவிகிதத்தை சற்றே தளர்த்தி அளிக்கப்படும்.

கடன் அடைப்பு ஏற்பாட்டுடன், வட்டியோடுகூடிய குறித்த கால கடன்

நடப்பு முதலீட்டுக்கான குறித்த கால கடன்

குறித்த கால கடன்

எதிர்பாரா நிகழ்வுக்கான கடனுதவி

அடமானம் (Security)

கடன் அல்லது இதர பொறுப்பேற்புக்காக உறுதித் துணையாக அளிக்கப்படும் சொத்துக்களை இந்த சொல் குறிக்கும்

சேவைகள் (Services)

சிறு மற்றும் குறு சேவை தொழிலகங்களைப் பொறுத்தவரை சேவைகள் என்பது சிறு சாலை மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைப்பாளர்கள், சிறு வணிகம் செய்வோர், வாழ்க்கை தொழிலர், சுயதொழிலோர் மற்றும் இதர சேவை நிறுவனங்களைக் குறிக்கும் வங்கிகள் அளிக்கும் சேவைகள் பின்வரும் பல்வேறு வசதிகளையும் உள்ளடக்கியதாகும். பணஅனுப்பீட்டு வசதிகள் (வரைவோலை, தந்தி வழி பணமாற்றம் முதலியன) பணம் பெறுதல், அளித்தல், பண நாணய, அந்நியச் செலாவணி மாற்று வசதிகள் முதலிய வாடிக்கையாளருக்கு அளிக்கப்படும் சேவைகளை உள்ளடக்கும்.

நலிவுற்ற நிறுவனம் (Sick Unit)

ஒரு நிறுவனத்தின் கணக்கு தரம் தாழ்ந்ததாக 6 மாதங்களுக்கும்மேல் இருந்தாலோ, கடந்த கணக்கீட்டு ஆண்டில் அதன் நிகரமதிப்பு பண நஷ்டங்களால் 50% அளவிற்கு அழிவுற்று, அந்த நிறுவனம் குறைந்தபட்சம் இரண்டாண்டுகளாவது வணிகரீதியான உற்பத்தியில் ஈடுபட்டிருந்தால் அது நலிவுற்ற நிறுவனம் என்று அழைக்கப்படும்.

கட்டணப்பட்டியல் (Tariff Schedule)

வாடிக்கையாளருக்கு வங்கி தான் அளிக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கும் கட்டணங்கள்

தமிழாக்கம்:
அ. சந்திரன், உதவி மேலாளர்மாலினி நராயணன், உதவி மேலாளர்
கணினி அச்சு:
செ. விஜயா, சிறப்பு உதவியாளர் (WPA)

(இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை)

இந்த நெறித் தொகுப்பு **பேங்கிங் கோட் அண்டு ஸ்டான்டார்டுஸ் போர்டு ஆப் இந்தியா (BCSBI)**, இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய வங்கிகளின் சங்கம் மற்றும் அங்கத்தினர் வங்கிகள் ஆகியவற்றுடன் ஆலோசித்து உருவாக்கப்படுகிறது. இந்த நெறித் தொகுப்பின் முக்கிய நோக்கம் நல்ல மற்றும் நேர்மையான வங்கியியல் நடைமுறைகளை ஊக்குவிப்பது, குறைந்தபட்ச தர அளவீடுகளை நிர்ணயம் செய்தல், ஒளிவு மறைவற்ற தன்மையை அதிகரித்தல், அதிக செயல்தரத்தை சாதித்தல் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக வங்கிக்கும் வாடிக்கையாளருக்குமிடையே சுமுகமான உறவை ஏற்படுத்தி, அதன் மூலம் வங்கி முறைமையில் சாதாரண மனிதனுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துதல். “வங்கிகள் தங்கள் சேவைகளை வழங்குவதில் உண்மையான ஆர்வத்துடன் வங்கிகளுக்கான நெறிகள் மற்றும் சேவைகளை கடைபிடிக்கிறார்களா என்பதை கண்காணிக்கவும் உறுதி செய்யவும்“, பிசிஎஸ்பிஐ (BCSBI) 2006 பிப்ரவரியில் ஒரு தன்னாட்சி நிறுவனமாக உருவாக்கப்பட்டது. பிசிஎஸ்பிஐ இரண்டு பிரிவுகளாக நெறித்தொகுப்புகளை வெளியிட்டது. **வாடிக்கையாளர்களுக்கு வங்கியின் கடப்பாடு பற்றிய நெறித்தொகுப்பு** மற்றும் **குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு வங்கியின் கடப்பாடு**. இந்த நெறித்தொகுப்புகள் பிசிஎஸ்பிஐ-ன் அங்கத்தினர் வங்கிகளான வர்த்தக வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிராந்திய கிராம வங்கிகள் ஆகியவற்றால் பின்பற்றப்படும். பிசிஎஸ்பிஐ அதன் வடிவமைப்பு மற்றும் கட்டளையுரிமைப்படி, ஒரு குறை தீர்க்கும் அமைப்பு அல்ல. எனினும், கொள்கைகளில் உள்ள இடைவெளிகள், வங்கிகளில் கடைபிடிக்கப்படும் நடைமுறைகள் மற்றும் வழக்கங்கள் ஆகியவை காரணமாக, முறைமைக் குறைபாடுகள் இருந்தால், அவற்றை அடையாளம்காணும் நோக்கோடு, பிசிஎஸ்பிஐ புகார்களில் கவனம் செலுத்துகிறது. அவற்றின் தீர்வுக்கும் நடவடிக்கையைத் தொடங்கிவைக்கிறது.

மேலும் பிசிஎஸ்பிஐ (BCSBI) குறித்த தகவல் பெற, www.bcsbi.org.in என்ற இணைய- தளத்தைப் பார்க்கவும்.